# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. III Issue 8 November 2013

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்

பக்கம்

லைப் டிவைன் . . . . . . . . . . . . . 2

இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . 12

சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . 13

யோக வாழ்க்கை விளக்கம் . . . . . 15

நெஞ்சுக்குரிய நினைவுகள் . . . . . 17

அன்பர்களும் அன்றாட
வாழ்க்கை நெறிமுறைகளும் . . . 20

அன்பர் அனுபவம் . . . . . . . . . . . 29

பூரணயோகம் - முதல் வாயில்கள் 31

அஜெண்டா . . . . . . . . . . . . . . . 33

அன்னை இலக்கியம் . . . . . . . . . 35

தெரியாது . . . . . . . . . . . . . . . . . 59

சாதனைக்கு உதவும்
விஷயங்கள் . . . . . . . . . . . . . . 61

## ஜீவியத்தின் ஓசை

புதிய உலகைத்

திறந்து காட்டும் திறன்

அருளுக்குண்டு

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

**ஸ்ரீ அரவிந்தம்**

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

## XXVI. The Ascending Series of Substance

Page 254
Para 3

These are important consideration.

It is so when we consider the possible relation between divine life and divine mind.

It is of the perfected human soul.

There is the very gross and seemingly undivine body.

Or formula of physical being.

In which we actually dwell.

There is a fixed relation.

It is there between sense and substance,

It is from there the material universe started,

It is not the only relation.

Therefore it is not the only formula.

Life and mind may manifest themselves in another relation to the substance,

And they would work out different physical laws,

They are other and larger habits.

It may be even a different substance of body.



## 26. உயரும் பொருளின் அடுக்குகள்

இவை முக்கிய கருத்துகள்.

தெய்வீக வாழ்வுக்கும், தெய்வீக மனத்திற்கும் உள்ள தொடர்பை நாம் கருதும்பொழுது இவை முக்கியமாகின்றன.

சிறப்பான மனித ஆத்மாவுக்குரியவை அவை.

ஜடமான தெய்வீகமற்ற உடலைக் கருதும்பொழுது இவை எழுகின்றன.

ஜடமான ஜீவனுக்குரிய சூத்திரம் இது.

நாம் அதனுள் வாழ்கிறோம்.

ஓர் நிலையான உறவுண்டு.

அது புலனுக்கும் பொருளுக்கும் இடையேயுள்ள உறவு,

அதிலிருந்துதான் ஜட உலகம் சிருஷ்டிக்கப்பட்டது,

இது மட்டுமே தொடர்பல்ல.

அதனால் இது மட்டும் சூத்திரமல்ல.

வாழ்வும், மனமும், பொருளுடன் வேறொரு தொடர்பு கொள்ளலாம்,

அவை வேறு ஜடமான சட்டங்களை இயற்றலாம்,

வேறு பெரிய பழக்கமாகும்.

அது உடலின் வேறு பொருளாகவுமிருக்கும்.

With a freer action of sense,
It may be freer action of life and mind,
There is a formula of our physical existence.
The same conscious life-force have embodied masses,
They are death, division, mutual resistance and exclusion.
These formulas are expressed in the animal body.
These are imposed upon the higher principles.
There is the narrow limitation of the senses.
There is the determination within a small circle.
There is the duration and power of the life-working.
It is obscure.
Its movement is lame.
The functioning of the mind is broken and bounded.
There are the yokes of the formula.
There is the rhythm of cosmic Nature.
They are not the only possibilities.
They are superior states.
They are higher worlds.
These laws can be imposed on the instruments of our being.
It may be by any progress of man.
It is imposed on this sensible form,
It may be by any liberation of substance,
Then there can be physical working of divine Mind and sense.
It will be in the human frame.
Even the evolution upon earth of something that we may
call a divinely human body.



அங்குப் புலன் சுதந்திரமாகச் செயல்படலாம்,
மனம், வாழ்வில் அதிக சுதந்திரமாகச் செயல்பட வழியுண்டு,
உடல் வாழ்வுக்குரிய சூத்திரம் உண்டு.
தன்னையறியும் உயிரின் சக்திகள் உருவம் பெற்றுள்ளன,
மரணம், பிரிவு, எதிர்ப்பு, விலக்கல் அச்சட்டங்கள்.
விலங்குடம்பில் இச்சூத்திரங்கள் வெளிப்படுகின்றன.
இவை உயர்ந்த தத்துவங்கள்மீது திணிக்கப்படுகின்றன.
புலன்களின் குறுகிய எல்லையுண்டு.
குறுகிய வட்டத்துள் முடிவுகள் செய்யப்படுகின்றன.
வாழ்வின் செயலுக்குப் பவரும் காலமும் உண்டு.
அது இருண்டது.
அதன் கால் ஊனம்.
மனம் செயல்படுவது அளவுள்ளது, விரிசல் விட்டது.
இவை இந்த சூத்திரத்தின் விலங்குகள்.
இவை பிரபஞ்ச இயற்கையின் வண்ண அலைகள்.
அவை மட்டும் நடக்கக் கூடியவையல்ல.
அவை உயர்ந்த நிலைகள்.
உயர்ந்த உலகம் உண்டு.
நம் கரணங்களின்மீது இந்தச் சட்டங்கள் செயல்படலாம்.
இது மனித முன்னேற்றத்தால் ஏற்படலாம்.
கரணங்களின் புலன்மீது செயல்பட வேண்டும்,
பொருள் விடுதலையடைவதால் இது நடக்கலாம்,
உடல் அப்பொழுது தெய்வீக மனம், உணர்வால் செயல்படும்.
இது மனித உடலில் நடக்கும்.
தெய்வீக மனித உடல் என்ற பரிணாமமும் நடக்கலாம்.

The body of man may someday come by its transfiguration,
The Earth Mother too may reveal in us her godhead.

Page 254
Para 4

There is a formula for the physical cosmos.
Even for that there is an ascending series.
It is in the scale of Matter.
It leads us from the more to the less dense.

It is from the less subtle to the more subtle.

We reach the highest term of that series.
It is the most supra-ethereal subtlety,
It is of material substance,
Or formulation of Force,
What lies beyond?
Not a Nihil.
It is not a Void.
For there is no such thing as absolute void.
Or real nullity.
We call something by that name.
It is simply something beyond our grasp of sense.
Beyond our mind or our most subtle consciousness.
Nor is it true that there is nothing beyond.
Or some ethereal substance of Matter.



மனித உடல் ஒரு நாள் திருவுருமாறலாம்,
பூமா தேவியும் நம்மில் தெய்வீகத்தை வெளிப்படுத்தலாம்.

ஜடமான பிரபஞ்சத்திற்கும் உரிய சூத்திரம் உண்டு.
அதற்கும் அடுக்கடுக்காய் உயரும் நிலைகள் உள்ளன.
இது ஜடத்தின் அளவு கோலில் உள்ளது.
கனம் அதிகமான இடத்தினின்று குறைவான இடத்திற்குப் போகிறது.
சூட்சுமம் குறைந்ததினின்று சூட்சுமம் அதிகப்படுமிடம் செல்கிறது.
அந்த அடுக்கில் அதிகபட்ச உயரத்தை நாம் எட்டுகிறோம்.
அது உயர்ந்த ஆகாயத்தின் அதிகபட்ச சூட்சுமம்,
அது ஜடப்பொருளாகும்,
அல்லது சக்தியின் உருவமாகும்,
அதைக் கடந்து உள்ளது என்ன?
அது சூன்யமன்று.
வெற்றிடமான சூன்யமுமில்லை.
பூரண சூன்யம் என்பது ஒன்றில்லை.
இல்லை என்பதின் பூரணத்திற்கு உண்மையில்லை.
நாம் அப்பெயரிட்டு அழைப்பது ஒன்றுளது.
நம் புலன்கட்குப் புலப்படாத நிலையிலுள்ளது அது.
நம் மனத்தைக் கடந்தது. சூட்சும ஜீவியத்தைக் கடந்தது.
நம்மைக் கடந்ததில்லை என்பதும் உண்மையில்லை.
ஆகாயமான ஜடப்பொருள் ஒன்றுண்டு.

It is the eternal beginning.

We know Matter and Material Force.

They are the last result of a pure Substance.

It is pure Force.

In which consciousness is self-aware.

It is self-possessing.

It is not as in Matter.

There it is lost to itself.

It is lost in an inconscient sleep or in an inert motion.

What then is there?

Between material substance and pure substance,

We do not leap from the one to the other,

We do not at once pass.

From the inconscient to absolute consciousness.

There must be grades between Matter and Spirit.

There are.

Below is the inconscient substance.

It is utterly self-conscious, self-extension.

It is like the principle between Matter and Spirit.

Page 255

Para 5

There are people who have sounded the depths.

They are agreed with this fact.



அதுவே ஆதிமூலம்.

ஜடமும், ஜட சக்தியும் நாம் அறிவோம்.

அவை தூய பொருளின் கடைநிலையென அறிவோம்.

அது தூய சக்தி.

அங்கு ஜீவியம் சுய உணர்வுள்ளது.

அது சுயமாகத் தன்னையுடையது.

அது ஜடத்திலிருப்பது போலில்லை.

அது அங்கே தன்னையிழந்துள்ளது.

ஜட இருளின் தூக்கத்திலும், ஜட அசைவிலும் தன்னை இழந்துள்ளது.

பிறகு என்ன இருக்கிறது ?

ஜடப் பொருளுக்கும் தூய பொருளுக்குமிடையே,

ஒன்றிலிருந்து அடுத்ததற்கு நாம் தாவுவதில்லை,

நாம் உடனே போவதில்லை.

ஜட இருளினின்று தூய ஜீவியத்திற்கு நேரடியாகப் போவதில்லை.

ஜடத்திற்கும், ஆன்மாவுக்கும் இடையே பிரிவுகளிருக்க வேண்டும்.

இருக்கின்றன.

கீழே ஜடப்பொருளுள்ளது.

தன்னையறியும் சுய விரிவு அது.

ஆன்ம, ஜடத்திடையேயுள்ள சட்டம் போன்றது.

ஆன்மாவின் ஆழத்தைக் கண்டவருண்டு.

இவ்விஷயத்தை அவர்கள் ஏற்கிறார்கள்.

They bear witness to it.

There are a series of subtler and subtler formations of substance.

They escape from the material formula.

They go beyond it.

Our present inquiry is limited.

It does not go deep into the occult and subtle regions,

We can adhere to the system of this inquiry,

There is an ascending series.

It is Matter, Life and Mind,

This series, we can say, correspond to it,

There is the higher divine triplicity of Sachchidananda.

All these have their own correspondences.

Substance ascends.

It bases itself on each of these principles.

They make it successively a characteristic vehicle.

It is for the dominating cosmic self-expression.

Contd...

### ஜீவிய மணி

**அருள் கர்மத்தை அழிக்கும். கர்மத்தை வளர்க்கும் மடமைக்கு நாம் உட்பட்டிருப்பதால் கர்மம் நிலைக்கிறது. கர்மத்தை ஒட்டி வந்த அறிவற்ற செயலைக் கைவிட்டுவிட்டால், அருள் கர்மத்தை அழிக்கும்.**



இதற்கு அவர்கள் சாட்சி.

பொருள் சூட்சுமமாகி அடுக்கடுக்காய் அமைகிறது.

அது ஜட சூத்திரத்தில் அகப்படுவதில்லை.

அதைக் கடந்தது அது.

இந்த ஆராய்ச்சி ஒரு அளவுக்குட்பட்டது.

அது சூட்சும உலகில் ஆழ்ந்து சஞ்சாரம் செய்யவில்லை,

இந்த ஆராய்ச்சியின் எல்லைக்குள் நாமிருப்போம்,

ஒரு உயரும் அடுக்குண்டு.

ஜடம், வாழ்வு, மனமெனப்படும் அது,

இந்த அடுக்கு அதனுடன் தொடர்புள்ளது எனலாம்,

சச்சிதானந்தத்தின் உயர்ந்த தெய்வீக மூவுலகம் உண்டு.

இவை தொடர்புள்ளன.

பொருள் உயர்கிறது.

அவை இந்தத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டன.

அவற்றைத் தொடர்ந்து சரியான கருவியாக்குகிறது.

பிரபஞ்ச சுய வெளிப்பாடு ஆட்சி செய்ய அது தேவை.

தொடரும்...

### ஜீவிய மணி

**சட்டங்கள், முறைகள், தர்மங்கள் ஆகியவற்றைப் பின்பற்றினால் அருள் நம்மை விட்டு விலகும். நாம் இவற்றை எல்லாம் விட்டு விலகிய பின்னரே அருள் நம்மை நாடி வரும்.**

இம்மாதச் செய்தி

# வேதம் கூறும் மனம் வாய்ப்பைப் பிரச்சனையாக்குகிறது





**Page 156: He sees in all things strangely fashioned here**

**இங்கு சிருஷ்டித்த அனைத்திலும் அவன் காணும்**

- ✡ ஏமாற்றும் சக்தியின் ஏற்கக் கூடிய கேலி
- ✡ மாயை கூறும் கதை, அவள் பெற்ற வலிமை
- ✡ பெரும் இடையறாத சலனம் கெட்டியாகப் பிடித்தது
- ✡ புதிரான மாற்றமறியாத மாற்றம்
- ✡ காலமென நாம் கூறும் தொடர்ந்த சிருஷ்டி
- ✡ மீண்டும் மீண்டும் எழும் தன்னைத்தானே புதுப்பிக்கும் சக்தி
- ✡ இவ்வசைவின் சுழற்சிகள், பெரும் சலனத்தின் சிறு சட்டங்கள்
- ✡ பிரபஞ்ச நடன லீலையின் நிலையான இப்பொருட்கள்
- ✡ சக்தியின் தானே எழும் அலைகள்
- ✡ தவநிலை சூன்யத்தின் சக்தியான ஆத்மா தொடரும்
- ✡ வாழ்வு, புலன், விழித்த மனத்தை எதிர்பார்த்து
- ✡ கல்லென சமைந்தவன் கனவுலகம் மாற மறுத்தது
- ✡ ஜடம் இருளாக செய்யும் நாணயமான வேலை நயமாக முடிந்தது
- ✡ ஊழிக் கால சட்டம் இஷ்டப்படி நடப்பதை இடையூறு செய்தது
- ✡ இயற்கையின் இயல்பான லீலை செயல்படும் அமைப்பு எழுந்தது
- ✡ அசைவையிழந்த ஆத்மாவின் ஊமை உணர்வு அசைந்தது

- ✡ மறைந்த சக்தி வாய்மூடி உடைந்து, மெதுவாக வெளிவந்தது
- ✡ ஜடத்தின் இதயத்தில் வாழ்வெனும் கற்பனைக்கு வழி ஏற்பட்டது
- ✡ இருண்ட ஜடம் தூசியாகி, விழித்து, உறுதி பெற்றசைந்தது
- ✡ ஜீவனின் மின்னல் தெறிப்பு வெற்றிடமான காலத்தைத் திடுக்கிட வைத்தது
- ✡ பிரம்மம் காலியாகி நீர்க்குமிழாயிற்று
- ✡ இறந்த அனந்தத்தின் அணுவான சிறு கண்டம்
- ✡ இறந்த ஜட ரூபம் அளித்த சூட்சும சுவாசம்
- ✡ உலகம் வாழும் ஒழுங்கான ஸ்வரம் விழித்தெழும் குரலையெழுப்பியது
- ✡ சொரணையற்ற சக்தி பாம்பெனப் பின்னி நின்றது
- ✡ ஜீவனற்ற பரப்பில் ஜீவன் துளிகளாக எழுந்தது
- ✡ ரூபமற்ற காற்றில் வாழ்வின் மணிகள் உருவாயின
- ✡ ஜட சட்டத்தை ஏற்கும் வாழ்வு பிறந்தது
- ✡ அதன் நோக்கத்தை அறிய முடியாத சுவடுகள்
- ✡ நிலையற்றது, எனினும் மாறாத நிலையுடையது
- ✡ தான் ஜனித்த முரண்பாட்டைத் தானே கூறியது
- ✡ அமைதியையிழந்து, நிலையற்ற நிலை பெற்று
- ✡ காலமெனும் நதியின் ஓட்டத்தில் தவறாது திரும்பித் திரும்ப வந்தது
- ✡ சிந்தனையற்ற ரூபங்களில் இலட்சியமான செயல்கள்
- ✡ சிறைப்பட்ட உறுதியின் உந்தியெழும் மூச்சு



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/3. ஜீவனற்றதை உளமாரப் போற்றும் உலகம் டயானாவைப் பாராட்டுகிறது.

- உலகம் உயர்ந்தோர் மாட்டே என்பது இலக்கிய நயம்.
- உலகம் உணர்ச்சி வயப்பட்டு, தன்னை மறந்து பாராட்டுவதை அனைவரும் அறிவர், மனம் நாடுவது அதையே.
- நடைமுறையில் எவர்சில்வர் சில்வரைவிட பளபளப்பானது. வேறுபாட்டை அறிவது எளிதல்ல.
- சர்ச்சில் இங்கிலாந்தையும், உலகையும் காப்பாற்றியவர். ௯0-ஆம் வயதில் அவர் இறந்தபொழுது சவ ஊர்வலம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.
- பள்ளி ஆசிரியை டயானா, இராஜகுமாரன் சார்லஸை மணந்து, விவாகரத்து செய்து AIDS போன்ற சர்வீஸ்களில் பங்கு கொண்டு, மறுமணம் செய்து, அளவுகடந்த பிரபலம் பெற்று, விபத்தில் இறந்தபின் அவள் சவ ஊர்வலம் சர்ச்சில் பிரபலத்தைக் கடந்தது.
- இராமனுக்கும், சீதைக்கும் இல்லாத பிரபலம் இராமனாகவும், சீதையாகவும் நடித்தவர் பெற்றதை உலகம் அறியும்.
- ஆண்டவன் எங்கும் நிறை பரம்பொருள். கண்ணில் பார்க்க முடிவதில்லை. Fashion என்பது உலகை ஆண்டவனைப்போல் எங்கும் நிரப்புகிறது. ஆண்டவனைக் காண முடியாமலிருக்கலாம். Fashion-ஐ அறியாமலிருக்க முடியாது.
- கோகோ-கோலா உலகப் பிரசித்தி பெற்ற பானம். அவர்கள் இதுவரை செய்ததைவிட உயர்ந்த பானம் தயாரித்தனர். ரசிகர்கள் எதிர்த்துப் போராட்டம் நடத்தி பழைய பானத்தை மீண்டும் கொண்டு வந்தனர்.

- மன்னராட்சியை அழித்து, மக்களாட்சி கொண்டு வர 400 ஆண்டுகட்குமுன் முதலாம் சார்லஸ் தலை பறிபோயிற்று. மகன் வெளிநாட்டில் தஞ்சம் புகுந்தார். பிறகு அவரை வரவழைத்து இரண்டாம் சார்லஸ் எனப் பட்டம் சூட்டினர்.
- மக்களாட்சி, **democracy**க்கு இங்கிலாந்து தாய் நாடு.
- நாட்டில் அரசியல் இரண்டாகப் பிரிந்தது. மக்களாட்சி ஒரு கட்சி, மன்னராட்சி மறு கட்சி. நாடும், மக்களும் இரு பிரிவாயினர்.
- ராஜாக்கள் பெயரைப் பிறந்த குழந்தைகட்கு வைப்பது உலகெங்கும் பரவிய பழக்கம். இங்கிலாந்தில் அந்த பழக்கம் மன்னரை அழித்தவரிடையே ஏராளமாக உண்டு.
- நாட்டில் மன்னர் வந்த இடங்கள், தங்கிய வீடுகள், படுத்த படுக்கைகள், சாப்பிட்ட தட்டு, டம்ளர்கள் புனிதமாகக் கருதப்பட்டு போற்றப்படுவதுண்டு. மன்னரை அழித்த கட்சியினரிடம் அது அதிகம் என்பது இன்றைய நிலை.
- செட்டிநாட்டு ராஜா மாளிகையில் அனைவரும் காணும்படி சுவரில் ஒரு சாப்பாட்டுத் தட்டு தொங்கும். அது மன்னர் அங்கு வந்த பொழுது அவர் சாப்பிட்ட தட்டு.
- ஜீவனை வழிபடுவதுபோலவே ஜீவனற்றதையும் மக்கள் வழிபடுவது பொதுமக்களியல்பு.
- உண்மை கண்ணுக்குத் தெரியாது.
- உள்ளம் உயர்ந்த உணர்வை அறிவதானால் தெரிந்து கொள்ளும்.
- புருஷன், பிரகிருதி என்பவை தத்துவத்தில் மனித இதயத்தில் வீற்றிருக்கும் இறைவனைக் குறிக்கும் — புருஷன் என அவனைத் தத்துவம் வர்ணிக்கும்.
- மொழி வளரும்பொழுது கணவன் புருஷனானான். கல்லானாலும் அவன் கணவனாகி, புருஷனாக மொழியால் நாட்டு வழக்கில் சிறந்து விளங்குகிறான்.



# நெஞ்சுக்குரிய நினைவுகள்

## யோகம் பயிலும் தகுதி

கர்மயோகி

தகுதியெனில் என்ன?

– பிறப்பால் ஏற்பட்ட தகுதி இன்று தவிர்க்கப்பட்டது.
அது பரம்பரை தரும் தகுதி.
அனைவருக்கும் அது வெவ்வேறு துறைகளில் உண்டு.
ஆழத்தில் சாரம் அனைவருக்கும் பொது.
பார்வைக்கு மேலே தெரிவது பெரும் வித்தியாசம்.
வித்தியாசத்தைப் பாராட்டுவோர்க்குத் தகுதியில்லை.
சாரத்தை ஏற்பவருக்குத் தகுதியுண்டு.

– தகுதியின் உண்மை எது?
நாம் எதை ஏற்கிறோம் என்பதைப் பொறுத்துத் தகுதி அமைகிறது.
‘மாடு மேய்ப்பவன் மந்திரியாவது’ காட்டுவதை ஏற்க வேண்டும்.

– அரசியல் சுதந்திரம் சட்டத்தில் சம உரிமை தருகிறது.

– சம உரிமையை அனைவரும் சமமாக அனுபவிக்க முடியுமா?
உரிமை நம்பிக்கையாலும், அறிவாலும் தகுதியாகிறது.

– ஒருவர் கண்டுபிடித்ததை உலகம் முழுவதும் அனுபவிக்கிறது.
உலகுக்குப் பயன்படும் பொருளை எளிய மனிதன் ஆர்வத்தால் முனைந்து கண்டுபிடித்து உலகத்தின் செல்வத்தைப் பெறுவதைக் காண்கிறோம் – பில் கேட்ஸ்.
இரண்டிலும் பொதுவானது உலகம் பெறும் பயன்.
மேதை உலகுக்குப் பயன்படும் விஷயத்தைக் கண்டுபிடித்தாலும், எளிய மனிதன் உலகுக்குப் பயன்படும் பொருளைக் – கம்ப்யூட்டர் – கண்டுபிடித்தாலும் உலகம் பெரும் புகழையும், பெரும் செல்வத்தையும் தருகிறது.
உலகம் பெற்றுப் பயனடைவதில் எவர் ஆர்வம் காட்டினாலும் அவருக்கு அது பலிக்கும்.

யோகம் உலகம் பெற வேண்டியது. அனைவருக்கும் சமமாக வழங்கப்படுகிறது.
விமானம், இரயில் கண்டுபிடித்தவர் யாரோ, அனைவரும் பயணம் செய்கின்றனர்.

– 1880-இல் அமெரிக்காவில் ஒருவர் **Ph.D.** டாக்டர் பட்டம் பெற்றார். அவரை மேதையாகக் கருதினர். இன்று ஒரு ஆண்டில் 50,000 பேர் **Ph.D.** பெறுகின்றனர்.
நம்பிக்கையும், முயற்சியும் உள்ளவர் அனைவரும், ஒரு காலத்தில் உயர்ந்ததாகக் கருதப்பட்டதை இன்று பெறுவதை நாம் காண்கிறோம்.

– நம்பிக்கை முழுமையானால் பலன் அபரிமிதமான அனந்தமாகும்.
நம்பிக்கையை நாம் அளவால் கணக்கிடுகிறோம்.
**நம்பிக்கை தரத்தால் உயர்ந்து முழுமை பெறவல்லது.**

– எது தகுதி, எனக்கு உரியது எது? பெரிய யோகம் சிறியவனுக்குப் பலிக்குமா?

– மனிதன் தன் தகுதியைத் தானே நிர்ணயித்துக் கொள்பவன்.
தேர்தல் வந்தபொழுது எளியவர் எல்லா உயரத்திற்கும் போகிறார்கள்.

– படிப்பு வந்தபொழுது எதுவுமில்லாதவர் எல்லாம் பெறுகிறார்கள்.

– யாகம், யக்ஞம் மூலம் வேதம் சச்சிதானந்தத்தைக் கடவுள்கள் உதவியால் பெற்றது.
உபநிஷதம் வேதத்தைக் கடந்தது.
கடவுள்களை அவர்கள் நம்பவில்லை.
கடவுள்கள், ரிஷிகள் தவத்தைத் தொந்தரவு செய்ததும் உண்டு.
கடவுள்கள் உதவியின்றி ரிஷிகள் சச்சிதானந்தத்தையும், அதைக் கடந்த பிரம்மத்தையும் அடைந்தனர்.
அவர்கள் யாகத்தைப் பயன்படுத்தவில்லை.

– ரிஷிகள் கடும் தவத்தால் பெற்றதை (உடலின் கடுமையான உழைப்பால் பெற்றதை) கீதை மனத்தின் நம்பிக்கையால் பெற்றனர். அவற்றைச் சரணம் செய்தும் பெற்றனர்.



கீதை பெற்றது மோட்சம். அதன் கருவி சரணாகதி – தர்மத்தைச் சரணம் செய்தனர். இது மனம்.
பூரண யோகம் மோட்சத்தைச் சுயநலமாகக் கருதுகிறது.
சத்திய ஜீவன் பிறப்பை நாடுகிறது.
இது அளவுகடந்த பெரிய லட்சியம். இதன் கருவி சரணாகதி – முழு ஜீவனைச் சரணம் செய்ய வேண்டும்.
அளவுகடந்த பெரிய லட்சியத்தை, அளவுகடந்து எளிய முறையில் அடைவது.
அதற்குரிய தகுதி – அளவுகடந்த பவித்திரம், பக்குவம், தூய்மை.

– யோகத்திற்குத் தகுதியை குரு நிர்ணயிப்பது வழக்கம்.
தகுதியுள்ளவரை குரு ஏற்பார்.
தகுதியற்றவரை மறுப்பதுண்டு. தகுதிக்கு உடையவராக மாற்றுவதும் உண்டு.
அது 25 வருஷம் பிரம்மச்சரியமாக இருப்பதுண்டு.
அதையே மீண்டும் செய்ய வேண்டி வரும்.

– அன்னையையொருவர் அறிந்தார் என்பது தகுதி.
தகுதியற்றவர் புதுவையிலேயே இருந்தாலும் அன்னையை அறிய முடியாது.
எந்த ரூபத்தில் அன்னையை ஒருவர் அறிந்தாலும், தகுதியில்லாமல் அது நடந்திருக்காது.
தகுதியை அன்னை அன்பர்கட்குக் கொடுத்துவிட்டார்.
பெற்றதை நிறைவேற்றுவது நம் பங்கு.
எந்த அளவில் நாம் பயன் பெறுகிறோம் என்பது, எந்த அளவில் நாம் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தது.
நெகிழ்ந்த உள்ளம் மலர்ந்தால் முழுப்பலன் உண்டு.

– பிரார்த்தனை பலித்த நேரம் நாம் பெற்றோம்.
பலன் பெற்ற வகையை அறிந்தால், **தவறாது** இதுவரை நடக்காதது நடந்தது தெரியும்.
அன்னை செயல்படும் அனைத்து நேரங்களிலும் இதுவரை எந்த யோகத்திலும் செயல்படாத சக்தி செயல்பட்டு இருப்பதைக் காணலாம். அதைக் காண்பது ஞானம்.

★ ★ ★ ★

# அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

## *18. ஆங்கிலப் பரீட்சை*

நான் பள்ளியில் ஆசிரியராக இருந்து, அதை விட்டுவிட்டு விவசாயத்தையும், அன்னையின் சேவையையும் முழுமையாக ஏற்றுக் கொண்டு 20 ஆண்டுகளுக்கு மேலாகின்றன. நான் ஆசிரியப் பணியைச் செய்த கடைசி நேர அனுபவத்தில், அன்னையின் அருள் ஓர் ஆர்வமுள்ள மாணவனின் வாழ்வில் வெளிப்பட்டதை இப்பொழுது கூறுகின்றேன்.

அது ஆண்டு இறுதி. எஸ்.எஸ்.எல்.சி. மாணவர்களுக்கு பரீட்சைக்கு முன், படிப்பதற்காக விடுமுறை விடப்பட்டிருந்தது. ஒரு நாள் மாலை பள்ளி முடிந்து எல்லோரும் போன பிறகும், நான் மற்றோர் ஆசிரியரிடம் வெகுநேரம் பேசிக்கொண்டு இருந்தேன். அந்த ஆசிரியர் ஒரு பெரிய நிலச்சுவான்தார். என்னுடன் அன்னை தியான மையத்திற்கு வந்து போய்க் கொண்டிருக்கும் அன்னையின் பக்தர். பழம்பெருந்தேசிய இயக்கத்தில் உள்ள பிடிப்பால் காந்தி ஆசிரமம் நடத்திய குடும்பத்தைச் சேர்ந்தவர். காங்கிரஸ்வாதி. ஒரு முக்கிய விஷயத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்த நாங்கள், நேரம் போனதே தெரியாமல் பேசிக் கொண்டிருந்துவிட்டோம்.

அப்பொழுது தூரத்தில் எங்களுக்காக யாரோ ஒரு மாணவன் காத்திருப்பதாகத் தெரிந்தது. அவன் எங்களில் யாருக்காகக் காத்திருக்கிறான் என்று தெரியவில்லை. அவன் அப்படி நீண்ட நேரம் காத்துக் கொண்டிருந்தான். நாங்கள் எழுந்து போய்ப் பார்த்தோம். எனக்காக ஓர் எஸ்.எஸ்.எல்.சி. மாணவன் காத்துக் கொண்டிருந்தான்.

நான் சற்றுத் தொலைவில் நின்று கொண்டு, நான் தென்னந் தோப்புக்குப் போக இருப்பதாகவும், நாளை வந்து சந்திக்கும்படியும் அவனிடம் கூறினேன். அவன் ஏதும் பேசவில்லை; போகவும் இல்லை. நின்று கொண்டே இருந்தான். “என்னிடம் உடனே தெரிவிக்க வேண்டிய விஷயம் ஏதேனும் இருக்குமோ? அவன் அதைத் தெரிவிக்க இயலாது திணறிக் கொண்டு நிற்கிறானோ?” என்று எண்ணிக் கொண்டே, மேலும் நடந்து போய் அவனை நெருங்கினேன்.

அவன் முகத்தில் உணர்ச்சிப் பெருக்கு. என்னை அருகே பார்த்ததும் மரியாதை காரணமாக நெளிந்தான். “பேப்பர் வந்து விட்டது” என்கிறான். கொஞ்சம் நிறுத்தி “நல்ல மார்க் கிடைத்திருக்கிறது” என்கிறான். பரவசத்திற்கும் சரி, வெள்ளத்திற்கும் சரி, நிதானம் இருப்பதில்லை. இரண்டுமே பாய்ந்து கொண்டு வரும். அப்படிப்பட்ட நிலையில் இருந்த அவனுக்கு அப்பொழுது ஓர் அணை போட நினைத்து, “வீட்டுக்கு வா; பேசலாம். நீ முன்னால் போ. நான் பின்னால் வருகிறேன்“ என்று கூறி அவனை அனுப்பி விட்டு, நண்பரிடம் விடை பெற்றுக்கொண்டு, நான் வீட்டுக்குப் புறப்பட்டேன். அவன் எனக்கு முன்னால் போய்க் காத்துக் கொண்டிருந்தான். அவன் முகம் பிரகாசமாக இருந்தது. ஏதோ கூறுவதற்கு அவன் உதடுகள் துடித்தன. கண்கள் கலங்கியிருந்தன. “என்ன விஷயம்? என்ன மார்க்?” என்று கேட்டேன். அவன் பதிலிறுக்காமல் தன் பையில் பேப்பரைத் தேட ஆரம்பித்தான். நான் உள்ளே சென்று கை, கால்களைச் சுத்தம் செய்து கொண்டு காப்பி சாப்பிட்டுவிட்டு வீட்டின் முன்பகுதியில் இருக்கும் அறைக்கு வந்தேன். அவன் மலர்ந்த முகத்துடன் ஆங்கிலப் பேப்பரை என்னிடம் கொடுத்தான்.

டிசம்பர் இறுதியில் இதே மாணவன் என்னிடம் வந்து ஆங்கிலம் பயிற்றுவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். எங்கள் பள்ளியில் பிப்ரவரி கடைசி வாரத்தில் எஸ்.எஸ்.எல்.சி. மாணவர்களைப் பொதுத் தேர்வுக்குத் தயார் செய்வதற்காக, எல்லாப் பாடங்களிலும் **Preparatory Examination** நடத்துவார்கள். ஆகவே, பிப்ரவரி 15-க்குமேல் மாணவர்களை அந்தத் தேர்வுக்கும், அதற்குப் பின்வரும் பொதுத் தேர்வுக்கும் தயார் செய்ய ஆரம்பிப்பதால், அவர்களைப் பொறுத்தவரை பள்ளியும், பாடம் கற்பதும் முடிந்துவிடும். அவன் மிகக் கால

தாமதமாக என்னை அணுகியிருந்தான். டிசம்பர் முடியப் போகின்றது. இடையில் இருக்கும் 45 நாட்களுக்குள் முறையாகக் கற்பிப்பதென்பது இயலாத காரியம்.

நான் அதைச் சொல்ல இருந்தேன். அவன் அதைப் புரிந்து கொண்டதுபோல முந்திக் கொண்டான். “சார்! நான் ஆங்கிலத்தைத் தவிர மற்ற எல்லாப் பாடங்களிலும் முதல் அல்லது இரண்டாவதாக வருவேன். ஆங்கிலத்தில் இதுவரைக்கும் பாஸ் மார்க் கிடைத்ததில்லை. நான் மற்ற பாடங்களில் எடுக்கும் அதிக மதிப்பெண்கள் காரணமாக இதுவரை நான் பாஸ் செய்தேன். இது எஸ்.எஸ்.எல்.சி. ஆங்கிலத்தில் 35 மதிப்பெண்கள் வாங்கவில்லை என்றால், பாஸாக முடியாது. ஆங்கிலத்தைப் பொறுத்தவரை மனப்பாடம் செய்வதும் சிரமமாக இருக்கிறது. இலக்கணம்வரை நீங்கள் கற்றுக் கொடுத்து நான் வாங்கும் மதிப்பெண்களை விட 10, 15 மதிப்பெண்களை அதிகமாக வாங்க உதவினால் பாஸ் செய்து விடுவேன்” என்றான்.

அவனுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்குப் போதுமான அவகாசம் இல்லை. ஆண்டுத் தொடக்கத்தில் அவன் இவ்வாறு கேட்டிருந்தால் முயன்று பார்த்திருக்கலாம். இலக்கணம்தான் பாடத்தைவிடக் கடினம். அவனுக்கு மனப்பாடமே வராத நிலையில், நான் ஊசி முனையில் ஒட்டகத்தைத் திணிப்பது எப்படி? அதுவும் தேர்வு நெருங்கிக் கொண்டிருக்கும் சமயத்தில்! அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. “நீ எத்தனை மதிப்பெண்கள் பெற்றாய்?” என்றேன். பதில் தயக்கமாக வந்ததே தவிர, மதிப்பெண்கள் என்னவென்று சொல்லவில்லை அவன். கூறுவதற்குக் கூச்சப்படுகிறான். அந்த அளவுக்கு அவன் மிகக் குறைந்த மதிப்பெண்களைப் பெற்றிருக்க வேண்டும்.

“இவனுக்கு நான் உதவ முடியாதே” என்று சங்கடப்பட்டேன் என்றாலும் அதைச் சொல்லத் தயக்கமாக இருந்தது. என் தவிப்பையும், தயக்கத்தையும் உணர்ந்தவன்போல, தன் நிலையை அவன் உருக்கத்தோடு விவரித்தான். அதிலிருந்து எனக்குப் பல செய்திகள் கிடைத்தன. அவனுடைய வகுப்பு ஆசிரியர் அவனை



ஏற்றுக் கொள்ளவில்லை. வெளியூரிலிருந்து தினமும் சைக்கிளில் 9 மைல் வந்து போகின்றான். அவனுடைய குடும்பத்தில் பள்ளியின் வாசலை மிதித்த முதல் நபர் அவன்தான். எல்லாப் பாடங்களையும் படிப்பதற்கு அவன் எவ்வளவு நேரம் செலவழிக்கின்றானோ, அவ்வளவு நேரத்தை ஆங்கிலப் பாடத்திற்காக மட்டும் செலவிடுகிறான் என்றாலும் அவனால் பாஸ் செய்ய முடியவில்லை.

“முடியாது” என்று சொல்லப் போவதாக முடிவு கட்டிவிட்ட அவன், மளமளவென்று கண்ணீர் விட்டான். அந்தக் கண்ணீர் அவன் கன்னத்தை நனைத்ததைவிட, என் நெஞ்சத்தை நனைத்ததே அதிகம். இரும்புக் கடலையை விழுங்கத் தயாராகி, அவனை ஏறிட்டுப் பார்த்தேன். “எதுவும் திட்டமிட்டுச் செய்ய முடியாத நிலையில், ஒரு மிகப் பெரிய வேலையைக் குறுகிய காலத்தில் செய்ய வேண்டும் என்று நினைக்கிறாய். உன் எண்ணத்திற்கு ஆண்டவன் துணை நிற்கட்டும்” என்று கூறி, நான் அவனை ஏற்றுக் கொண்டேன்.

நான் மறு நாள் மற்ற மாணவர்களுக்குப் பாடம் நடத்திய பொழுது, அவனால் அதில் சரிவரக் கலந்து கொள்ள முடியவில்லை. அவர்களெல்லாம் இலக்கணப் படிப்பை முடித்து விட்டார்கள். அதனால்தான் அவர்களுக்குச் சமமாக அவனால் கலந்து கொள்ள முடியவில்லை. எல்லா மாணவர்களையும் அனுப்பி விட்டு அவனைச் சிறிது சோதனை செய்தேன். ஒன்றிலும் அவன் உருப்படியாக இல்லை. ஆக “அவனை நான் ஏற்றுக் கொண்டது எனக்கு ஏற்பட்டிருக்கும் மிகக் கடுமையான சோதனை” என்பது புரிந்தது.

அதற்கு 15 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலத்தில் விடுப்புக் கடிதம்கூட எழுதத் தெரியாத ஒருவருக்கு, பிரைவேட்டாக பி.ஏ. தேர்வு எழுத ஆங்கிலம் மட்டும் கற்றுத் தந்தேன். என் நண்பர்களுக்கு அது பைத்தியக்காரத்தனமாகத் தோன்றியது. “கறுப்பு நாயை நீங்கள் வெள்ளை நாயாக்கப் பாடுபடுகிறீர்கள். முடிகிற காரியமா அது?” என்றெல்லாம் ஏளனம் செய்தார்கள். அது எனக்கு ஒரு சவாலாக அமைந்தது. இரவு பகலாக

முயன்றேன். முடிவில் கறுப்பு நாய் வெள்ளை நாயாகி விட்டது! என் மாணவர் பி.ஏ. தேர்வில் வெற்றி பெற்றார்.

அத்தகைய சவால் ஒன்றை மீண்டும் நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். அதாவது, ஆங்கில இலக்கணம் தெரியாதவனைத் தேர்வில் வெற்றி பெறச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். அது நிறைவேறுவதற்குப் போதுமான நாட்கள் இல்லை. மழுங்குணி மாங்கொட்டையாக இருந்த மாணவனை, மந்திரவாதியின் மாமரத்தைப்போல வளர்த்துக் காட்ட வேண்டும். நான் தயார், ஆனால் அவன் தயாராக இல்லை. ஆங்கிலம் வாராத மாணவர்கள் நெட்டுருப் போட்டு மனப்பாடம் செய்து சமாளித்துக் கொள்வார்கள். இந்த மாணவனுக்கு மனப்பாடமும் வரவில்லை. மேற்கொண்டு என் சிந்தனைக்கு எந்த வழியும் புலப்படவில்லை. அன்னையைத்தான் நினைத்துக் கொண்டேன். "ஆங்கிலத்திற்கும் அன்னைக்கும் எப்படித் தொடர்பு ஏற்படுத்தலாம்?" என்பது எனக்குப் புரியவில்லை.

மாணவனை மறுக்க முடியாததால் ஏற்பட்ட கஷ்டம், என்னைப் பிரார்த்தனையை நோக்கிச் செலுத்திற்று. "உன்னால் முடிந்ததை எல்லாம் செய்து முடித்தால், மீதியை அன்னை செய்வார்" என்ற பொன்மொழி என் நினைவுக்கு வந்தது. "உன்னால் முடிந்ததை எல்லாம் செய்து முடி" என்று பையனிடம் எப்படிச் சொல்ல முடியும்? என்னால் ஏதாவது முடிந்தால் அதைச் செய்யலாம். அந்தப் பையனுக்காக நான் என்ன செய்யலாம்? கற்றுத் தரலாம். ஆனால் கற்க முடியாதே! பிறகு என்னதான் செய்வது? ஒன்றும் தோன்றவில்லை. அப்பொழுது, "மற்றவர் கண்ணோட்டத்தில் பிரச்சனையைப் பார்த்தால், சிக்கல் அவிழும்" என்று அன்னை கூறியது நினைவுக்கு வந்தது.

அதன் மூலம் ஒன்று புரிந்தது. நான் அவனாக வேண்டும். அந்நிலையில் நின்று பார்த்தபொழுது புதிர் புரிந்தது. "அவனுக்குப் பாடத்தைத் திணிக்க முயல்வது பாறையைக் கிளறி விவசாயம் செய்வதைப் போன்றது. எனவே, அந்த முயற்சியை விட்டுவிட்டு, அவனுக்கு மனப்பாடம் கூடிவர உதவி புரியலாம்" என்றெண்ணி, "சொந்தமாக ஓரளவு ஆங்கிலம்



எழுதக் கற்றுக் கொண்டால், மனப்பாடம் செய்வதில் உள்ள சிரமம் குறையும்" என்று அவனிடம் கூறினேன். "எங்கள் வகுப்பில் முதல் மாணவன் உட்பட, அனைவரும் ஒரு வரி கூடச் சொந்தமாக எழுதத் தெரியாமல் இருக்கும்போது என்னால் அது முடியுமா?" என்று கேட்டான் அவன். அது மனப்பாடத்திற்கு மிகவும் உதவி செய்யும் என்று பல சான்றுகளுடன் நான் எடுத்துக் கூற, அவன் வேறு வழியில்லாமல் ஏற்றுக் கொண்டான்.

எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் அமைந்த எளிய வாக்கியம் ஒன்றை அவனுக்குக் கற்றுக் கொடுத்து, இதேபோல நூறு வாக்கியங்களை எழுதினால் நல்லது. அதுபோலவே, 10, 12 முக்கியமான அமைப்புகளைக் கற்றுக் கொள்ளலாம் என்றேன். அவன் தெரிந்து கொண்டான் என்றாலும், புரிந்து கொள்ள வில்லை. அவன் எழுதிய வாக்கியங்களில் நான் சொல்லிய மூன்றும் (எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்) இருந்தாலும், மற்றவை எல்லாம் தவறாகவும், குளறுபடியாகவும் இருந்தன. இந்தக் குறைகள் நீங்க வேண்டுமானால் பயிற்சி அவசியம்.

"சரியோ, தவறோ, இன்னும் 100 எழுது" என்றேன். காலை 9 மணிக்கு எழுதத் தொடங்கினான். பகல் 12 மணிக்கு 100 எழுதி முடித்தான். படித்துப் பார்த்தால் அத்தனையும் பிழைகள் என்றாலும் நான் அவனைக் கோபித்துக் கொள்ளவில்லை. அவனை மேலும் தொடருமாறு பணித்தேன். அவன் வீட்டுக்குப் போகவில்லை. முளை அடித்ததுபோல உட்கார்ந்து மாலை 5 மணிக்கெல்லாம் 500 வாக்கியங்களை எழுதி விட்டான். என் அன்றைய 17 ஆண்டு சர்வீஸில் அதுபோன்ற ஓர் ஆர்வத்தை மாணவரிடையே நான் கண்டதில்லை. 500-இல் எதுவுமே சரி இல்லை. என்றாலும் பாதகம் இல்லை.

அவனுடைய ஆர்வம் அளவிடற்கரியது. இந்த ஆர்வத்தைப் பயிர் செய்து பயன் மிக்கதாக விளைய வைக்க ஆசிரியப் பயிற்சி முறைகளிலோ, மொழி இலக்கண ஆராய்ச்சிகளிலோ இதுவரை ஒரு திட்டமும் அமைக்கப்படவில்லை. கல்வியின் அடிப்படையை இங்கிருந்துதான் தொடங்க வேண்டுமே தவிர, அரிச்சுவடியில் அன்று. திட்டம் இருக்கட்டும். அந்தப்

பையனின் ஆர்வத்திற்கு அன்னை துணை செய்வார். அவன் பாஸ் செய்துவிடுவான் என்று நான் நம்பினேன். எப்படி என்பது எனக்கு விளங்கவில்லை. எனக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. விளக்கம் தெரியவில்லை. அது தேவையும் இல்லை.

நான் அவனுக்கு முழுமனத்துடன் பாடம் சொல்லிக் கொடுத்தேன். காலையில் அவனுக்குப் பாடத்தை முடித்துவிட்டு நான் பாண்டிச்சேரிக்குப் போய் மாலையில் திரும்பும்வரை, அவன் எழுதிக் கொண்டிருப்பான். நான் திரும்பி வந்து அவன் எழுதியதை எல்லாம் வாங்கித் திருத்திக் கொடுப்பேன். அவன் திருத்தங்களை எல்லாம் திருத்தி எழுதிக் காண்பித்த பிறகே வீட்டுக்குப் புறப்பட்டுப் போவான். 3, 4 நாட்களுக்குள் ஒன்றிரண்டு வாக்கிய அமைப்புகள் பெரும்பாலும் அவனுக்குப் பிடிபட்டு விட்டன. "தனக்குச் சரியாக எழுத வருகின்றது" என்ற நம்பிக்கை, அவனுடைய ஆர்வத்தை உந்து சக்தியாக ஊக்கி உயர்த்தியது.

டிசம்பர் 25-இல் தொடங்கி ஜனவரி 17-இல் பள்ளி திறப்பதற்குள் முக்கியமான 10, 12 வாக்கிய அமைப்புகளைக் கற்றுக் கொண்டு விட்டான். அதை மேலும் வளர்ப்பதற்காக அவனுடைய பாடப் புத்தகத்தில் உள்ள ஒரு கதையைச் சொந்தமாக எழுதக் கற்றுக் கொடுத்தேன். ஒருவாறு கருத்து விளங்கும் அளவுக்கு அதை எழுதி முடித்து விட்டான். அது எலி, புலியைப் பிடிப்பதற்கு ஒப்பாகும். சாதனை என்ற அளவிலே அவனுக்குச் சந்தோஷம்; எனக்குப் பரம திருப்தி.

இதெல்லாம் பரீட்சையில் மதிப்பெண்கள் வாங்க உதவா. ஆனால் தூண்டுதலாக அமையும்; அமைந்தது. இந்த முன்னேற்றத்தால் அவனுக்கு இலக்கணமும் பிடிபட்டது. மற்றொரு மாணவனிடம் இருந்த நோட்டை அவனிடம் கொடுத்து, பழைய இலக்கணப் பாடங்களைப் படித்துப் பார்க்கச் சொன்னேன். அவன் எழுத்துகளில் சிறு சிறு பிழைகள் இருந்தன என்றாலும் கருத்து சரியாக இருந்தது. இருபதே நாட்களில் அவனிடம் காணப்பட்ட முன்னேற்றம் அரியது. இப்பொழுது அவனுக்கு இலக்கணக் குறிப்புகள் புரிந்தமையால், பாடப் புத்தகம் முழுவதிலுமிருந்து பல வாக்கியங்களை எடுத்து



இலக்கணப் பயிற்சி கொடுத்தேன். மேலும் சில நாட்களுக்குப் பிறகு பிழைகள் குறைந்து விலகி விட்டன. பாடப் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு பாடத்தையும் தன் சொந்த ஆங்கில நடையில் எழுதிப் பார்க்கும் அளவுக்கு அவன் முன்னேறி விட்டான். இப்பொழுது அவனுக்குத் தேர்வு, கொட்டும் தேள் அன்று; சுவையூறும் தேன்.

அன்னை அவனுக்கு அனுக்கிரகம் செய்ததை நினைக்கும் போதும், அந்த மாணவன் எடுத்துக் கொண்ட பெரு முயற்சியை நினைக்கும் போதும் நான் இன்றும் நெகிழ்ந்து போகின்றேன்.

பிப்ரவரி கடைசி வாரத்தில் **Preparatory Examination** வந்தது. அதாவது பயிற்சிக்கான தேர்வு. "அந்தத் தேர்வில் நீ மனப்பாடம் செய்து எழுதாமல், சொந்தமாகவே ஆங்கிலக் கட்டுரைகளை எழுத வேண்டும்" என்று நான் கூறிய பொழுது, அவன் பயந்து போனான். "வீட்டில் எழுதிப் பார்க்கலாம். ஆனால் தேர்வில் எழுதப் பயமாக இருக்கிறது" என்றான். "எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் நீ மனப்பாடம் செய்து எழுது. இது நம் பள்ளித் தேர்வுதானே? பயம் இல்லாமல் சொந்தமாக எழுது" என்று கூறி, அதற்கு அவனைச் சம்மதிக்க வைத்தேன். அந்த மாணவன் என்னிடம் தேர்வு விடைத்தாளைக் கொடுத்த பொழுது, அந்த இரண்டு மாத அனுபவங்கள் என் மனத்தில் ஒரு கணம் தோன்றி மறைந்தன.

விடைத்தாளில் மதிப்பெண்களைப் பார்த்தேன். 66 என்று இருந்தது. என்னால் நம்ப முடியவில்லை. பிரமிப்புடன் அவனைப் பார்த்தேன். அவன் "அதில்லை சார்! விசேஷம்" என்றான். "அதற்கு மேலும் கூட ஒரு விசேஷம் இருக்குமா; என்ன விசேஷம்?" என்று கேட்டேன்.

ஆங்கில ஆசிரியர் வகுப்பிற்கு வந்து என் பெயரை அழைத்து, "யாரது?" என்று கேட்டார். கடைசி பெஞ்சிலிருந்த நான் எழுந்து நின்றேன். "நீதானா அது?... நீ இந்த வகுப்பு மாணவனா?" என்று கேட்டார் அவர். "ஆம்" என்றேன் நான். "இந்த வகுப்பில் நீ நடுவில் வந்து சேர்ந்தாயா?" என்று கேட்டுவிட்டு என்னை மேலும் கீழுமாகப் பார்த்தார். "நான் இந்தப் பள்ளியில் 6 வருடங்களாகப் படிக்கிறேன். சென்ற ஆண்டும், இந்த ஆண்டும்

நீங்கள் எனக்குப் பாடம் எடுக்கின்றீர்கள்” என்றேன்.

ஆனாலும் அவருக்கு என்னைத் தெரியவில்லை. “நீ ஆங்கிலப் பேப்பரில் என்ன செய்தாய்? எப்படி எழுதினாய்? யார் கொடுத்த நோட்ஸ்? என்று கேட்டார். நான் சொந்தமாக எழுதினேன்” என்றேன். அவருக்குப் புரியவில்லை. வகுப்பில் யாரும் என் பேச்சை நம்பவில்லை. ஆசிரியர் என்னை இமைக்காது பார்த்துக் கொண்டே, “நான் நேற்று எல்லாப் பேப்பர்களையும் திருத்தி முடித்த பிறகு சாப்பிட உட்கார்ந்தேன். என் மகன் நான் திருத்தி வைத்த ஒவ்வொரு தாளையும் எடுத்து மொத்த மதிப்பெண்களையும் கூட்டி முடித்தான். முதல் மதிப்பெண் யாருக்கு என்று கேட்டேன். உன் பெயரைச் சொன்னான். உன்னை எனக்கு யார் என்று தெரியவில்லை. வழக்கமாக ராமச்சந்திரன்தான் முதல் மதிப்பெண் வாங்குவான். அவனுடைய மதிப்பெண் என்ன என்று பார்த்தால், 64ஆக இருந்தது. முதல் இடத்தில் இருந்தவனைக் கீழே பிடித்துத் தள்ளிய மாணவன் யார் என்று தெரிந்து கொள்ளப் பரபரத்தேன். கையலம்பிவிட்டு வந்து உன் விடைத்தாளைப் பார்த்தேன். நான் அதில் மதிப்பெண்களைப் பாரபட்சம் இல்லாமல் சரியாகப் போட்டிருக்கிறேன். மதிப்பெண்களைக் கூட்டிய என் மகனும் சரியாகவே போட்டிருக்கிறான். நீ நன்றாகவே எழுதி இருக்கிறாய். உனக்கு எனது பாராட்டுகள்” என்றார். “அதைக் கேட்டதும் வகுப்பில் அதிர்ச்சி; எனக்குப் பேரதிர்ச்சி! 5ஆம் வகுப்பிலிருந்து ராமச்சந்திரன்தான் முதல் மாணவனாக விளங்கி வந்தான். நான் அவனையும் மிஞ்சி 66 மதிப்பெண்கள் பெற்றது மிகப் பெரிய அதிசயம். என்னால் அதைத் தாங்க முடியவில்லை” என்று தொண்டை கரகரக்க, கண்கள் கலங்கக் கூறி முடித்தான் அந்த மாணவன்.

அந்த மாணவன் பாஸ் செய்ததற்காக விழாக் கொண்டாடலாம். ஏனென்றால் முயற்சி திருவினையாக்கிய நிகழ்ச்சி அது. அவனுடைய பேரார்வத்தைப் போற்றி, அன்னை ராமச்சந்திரனை-யும் தாண்டி அழைத்துச் சென்றார்கள். அன்னையின் அற்புதங்கள் ஒவ்வொன்றும் அப்படிப்பட்டவை.

❀❀❀



## அன்பர் அனுபவம்

சுஜாதா, சேலம்

என் பெயர் சுஜாதா. நான் சேலத்தைச் சேர்ந்த அன்னை அன்பர். ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர் அவர்களால் நாங்கள் பெற்ற அருள் ஏராளம். பல அற்புதங்களை ஸ்ரீ அன்னை அவர்கள் என் வாழ்க்கையில் நடத்தி உள்ளார்கள்.

பிப்ரவரி மாதம் இருபத்திரெண்டாம் தேதியன்று ஒரு அற்புதம் எங்கள் வாழ்க்கையில் நடந்தது. அதை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். என் நாத்தனாருக்கு, என் மாமனார் அவர்கள் 1985, நவம்பர் மாதம் 28-ஆம் தேதியன்று எங்கள் ஊரில் ஒரு நிலம் வாங்கிக் கொடுத்திருந்தார். அதன் விலை அப்போது 18,000/- ரூபாய். அந்த நிலத்தை ஒரு மூன்று, நான்கு வருடங்களாக விற்பதற்கு என் நாத்தனார் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். அந்த நிலத்தை நல்ல விலைக்கு விற்க முடியாதபடி, அதற்கு அருகிலுள்ளவர்கள் பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள். அந்த நிலத்தை ஒரு சதுர அடி 200 ரூபாய்க்கு நாங்களே வாங்கிக் கொள்கிறோம் என்று அருகில் உள்ளவர்கள் கேட்டுக் கொண்டு இருந்தார்கள். பிறகு, என் நாத்தனார் அதை விற்கும் பொறுப்பை ஒரு வருடமாக என்னிடம் கொடுத்தார்கள். நான் ஸ்ரீ அன்னையின் பொற்பாதங்களில் சமர்ப்பித்துவிட்டு, சில தரகர்களிடம் சொல்லி விற்பதற்கு முயற்சி எடுத்தேன். அப்படியும் யாரும் சதுர அடி ரூபாய் 300/-க்குமேல் வாங்கத் தயாராகயில்லை. பிப்ரவரி 2-ஆம் தேதி, ஒரு தரகர் சிலரை எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தார். வந்தவர்கள் அந்த நிலத்தை ஒரு சதுர அடி ரூபாய் 425/-க்கு வாங்க சம்மதித்தார்கள். மேலும் முன்பணமாக ரூபாய் 10,000/- கொடுத்தனர். மார்ச் 11-ஆம் தேதி அந்த நிலத்தை கிரயம் செய்து கொடுத்தோம். அந்த இடத்திற்கு ரூபாய் 5,50,000/- தொகையை ஸ்ரீ அன்னை அவர்கள் வாங்கிக் கொடுத்தார்கள். **Registration** பத்திர பதிவு முடித்து, வீட்டிற்கு

நாங்கள் வந்த பிறகு, என் நாத்தனார் என்னிடம் ரூபாய் 20,000/- கொடுத்தார்கள். எனக்குக் கிடைத்த எதிர்பாராத வருமானத்தினால் எனக்கும் மிகுந்த சந்தோஷம்.

ஸ்ரீ அன்னையின் பாதங்களில் பிரச்சனைகளைப் பரிபூரணமாக சமர்ப்பித்து விட்டால், எந்தப் பிரச்சனையும் சுமுகமாகத் தீர்ந்து விடும் என்ற நம்பிக்கையுடன், எங்கள் அன்பு தெய்வம் ஸ்ரீ அன்னை அவர்களையும், பகவான் ஸ்ரீ அரவிந்தர் அவர்களையும், இந்த தெய்வங்களை எங்களுக்கு அறிமுகப்படுத்திய தவத்திரு. அப்பா ஸ்ரீ கர்மயோகி அவர்களையும், உயர்திரு. அண்ணன் அவர்களையும் வணங்கி என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மௌன சாதனை பெரிய சாதனை. மௌனம் பூரணமானால் சாதனையே மௌனமாகி அழியும். அது சாதனையைக் கரைக்கும் மௌனம். சாதனையை விலக்கும் மௌனம் பிரம்ம மௌனம். சாதனை அழிவதுபோல், பிரம்மத்தை அறிவதும் அழியும் மௌனமுண்டு. பிரம்மத்தை அறியும் அவசியமும் அழியும் பொழுது, மனிதன் பிரம்மமாகிறான். மௌனம் அதிகமாக சாதிக்கும். சாதனையையே அழிக்கும். மௌனத்தையும் அழித்து பிரம்மமாகும்.

Silence silences Silence
to become Brahman.

எந்த முறையின் மூலமும் பிரம்மத்தின் சாரமான மூலம்.

Perfection of methods
ends in Brahman.



## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 96. கடந்ததை மாற்ற முடியாது

- அது கர்ம வினை என்பது உலகம் அறிந்தது.
- ஒருவர் வாழ்வில் கடந்தகால கர்மம் இன்று பக்தியால் மாறினால் அவருக்குப் பூரண யோகம் பலிக்கும்.
- M.A. English Literature-இல் சேர விரும்பும் மாணவன் B.A.-இல் ஆங்கிலத்தில் பெயிலானவன். எப்படிச் சேர்வது. புரொபசரிடம் போனான். டிகிரியைப் பார்த்து விட்டு முகம் சிவந்தது. நீ எப்படி பாஸ் செய்வாய் என்றார். மேலிடத்து சிபாரிசு.
  முன்னிரு பரிட்சைகளிலும் இங்கிலிஷில் பெயிலானது புரொபசர் கோபத்தை உயர்த்தியது. சிபாரிசால் சேர்த்து விட்டார்.
- மாணவன் அன்பனில்லை. அன்பருக்கு மாணவன்மீது அக்கறை. சேர்ந்து ஒரு வாரம் ஆனபின் M.A.-இல் உள்ள 60 மாணவர்களும் இந்த மாணவனைப்பற்றியே பேசினர். விஷயம் புரொபசருக்குப் போயிற்று. மாணவனை வரச் சொன்னார்.
  40 ஆசிரியர்களும், 60 மாணவர்களும் பெயிலான இந்தப் புது மாணவனை மேதை என்கின்றனர். அது உண்மை எனக் கண்டு புரொபசர் மனம் மாறி அவனைப் பாராட்டினார்.
  **கடந்த காலம் மாறியது. கர்மம் அழிந்தது.**
- இது அன்னை அன்பர் மாணவன்மீது கொண்ட பற்றுதலால் நடந்தது.
- அந்த அன்பர் யோகம் செய்தால் பலிக்கும்.
- அந்த மாணவன் யோகம் செய்தால் பலிக்கும். இது, **பூரணயோக வாயில் திறப்பது.**

- சுயநலமியின் சுயநலத்திற்கு அளவில்லை, வெட்கமில்லை, எல்லையில்லை.
  அடுத்தவரை அணுகி அவர் சொத்தை தனக்குத் தருமாறு கேட்கிறான்.
  அவர் இசைந்தார். நடக்கவில்லை.
- சில மாதங்களில் சுயநலமியின் பெரிய சொத்து பறி போயிற்று.
  கர்மம் செயல்படுகிறது, எப்படித் தப்பிக்க முடியும், முடியாத காரியம்.
- சுயநலமி எவர் சொத்தைக் கேட்டானோ அவரிடமே உதவிக்குப் போனான்.
  சில நாட்களில் எதிர்பாராமல் சொத்து காப்பாற்றப்பட்டது.
  **கர்மம், கடந்த கால நிகழ்ச்சி கரைக்கப்பட்டு, நிலைமை மாறியது.**
- அன்பர்கள் வாழ்வில் இதுபோன்ற காரியங்கள் நடக்கத் தவறுவதில்லை.
- அதன் பொருள் கர்மம் கரைவதில்லை.
- அதன் பொருள் யோகம் பலிக்கும் அறிகுறி.
- அன்பர் அனைவருக்கும் யோகம் பலிக்கும் எனக் கூற முடியாது.
- அன்பர் வாழ்வில் நடப்பவை அதற்கான வாய்ப்பிருப்பதைக் காட்டும்.
- வாய்ப்பைப் பின்பற்றினால் யோகம் பலிக்கும் எனக் கூற முடியாது.
  யோகம் செய்யும் வாய்ப்பு தொடர்ந்து எழும்.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மனிதன் பல நிலைகளில் வாழ்கிறான். ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்குச் செல்லும் வாய்ப்பு அருளாகும். அடுத்த நிலைக்குச் செல்லும் முயற்சி அருளைக் கொண்டுவரும்.



## அஜெண்டா

**அளவு கடந்த அபரிமிதமான அனுபவம் மனிதனைச் சூழ்ந்துள்ளது. மனம் ஆசையால் அதைச் சுருக்குகிறது.**

- உலகில் Genius மேதை என்பவர் 100 ஆண்டுகளில் ஒருவர் பிறப்பதை நாம் அறிவோம்.
- 200 ஆண்டுகட்குமுன் செயிண்ட் சைமன் என்ற பிரெஞ்சுக்-காரருடைய சிஷ்யன் காம்ட் என்பவர், எதிர்காலத்தில் 3 கோடி 70 லட்சம் நியூட்டன், 3 கோடி 70 லட்சம் தத்துவ ஞானிகள், 3 கோடி 70 லட்சம் எழுத்தாளர்கள் பிறப்பார்கள். கடல் உப்பு நீர் ஆரஞ்சு ரஸமாகும் என்றார்.
- லட்சத்தில் ஒருவர் பெற்றதை 300 அல்லது 400 ஆண்டுகள் கழித்துக் கோடிக்கணக்கானவர் பெறுவதை நாம் காண்கிறோம்.
- ஒரு விதை முளைக்க இயற்கை ஒரு நூறு பழம் உற்பத்தி செய்கிறது. சில சமயம் ஒரு ஆயிரம் பழமும் உற்பத்தி செய்கிறது. அரிதாகப் பல ஆயிரமும் உற்பத்தி செய்கிறது. பூக்கும் எல்லாப் பூவும் பழமானால், பழுக்கும் எல்லாப் பழமும் முளைத்தால் உலகில் நிற்க இடமிருக்காது.
- மேதை யார், மேதா விலாசம் எது, மேதை உருவாகும் முறை எது, எந்தச் சக்தி மேதையைப் பிடிக்கச் செய்கிறது என்பதை அறிந்தவர்,
  - எந்த 100 பேர் உள்ள கூட்டத்திலும் 90 பேருக்கு மேதா விலாசம் உண்டு எனக் காண்பார்.
  - யார் வாயில் வரும் எந்தச் சொல்லும் பேரிலக்கியத்தின் பெரு வாழ்வைக் குறிக்கிறது என அறிவார்.
  - இக்கருத்தை நம் கவனத்தைக் கவர பகவான் திருடனுடைய அடி திருவடி எனவும், விபச்சாரியின் கற்பு விலைமதிக்க முடியாதது எனவும் கூறினார்.
  - ஒலிம்பிக் கோச் கிராமப் பள்ளிகளின் விளையாட்டு

மைதானத்தில் வந்தால் எல்லாச் சிறுவரிடமும் எல்லாத் திறமையும் எந்த நேரமும் நிறைந்துள்ளது எனக் காண்பார்.

— கிளென்டோமன் இந்த உண்மையின் ஒரு அம்சத்தை அறிந்து, அந்த அடிப்படையில் நடத்தும் பள்ளி மாணவரிடம் பொறாமையில்லை, சிலர் நோபல் பரிசு பெற்றனர், நோபல் பரிசு பெறும் திறமையுள்ள பலர் அதை நாடுவதில்லை. நான்கு வயதில் எந்தக் குழந்தையும், எந்தப் புத்தகத்தையும் படிக்கும் எனக் கண்டு உலகுக்கு அறிவித்தார்.

- அன்னைக்குத் தாவரம், விலங்கு குரல் கேட்கும், காட்டு மனிதர்கட்கு இத்திறன் உண்டு. அக்கண்ணோட்டத்தில் உலகைச் சற்று கண்டால்,
  உலகம் அற்புதக் காட்சியாகத் தெரியும்.
  பிறந்தவரெல்லாம் மேதை, இருப்பது எல்லாம் அதிசயம்,
  நடப்பது எல்லாம் அற்புதம், உலகில் இறைவன் எந்த நேரமும் ஆனந்தவாரியாக அனுபவிப்பது தெரியும்.
  மனம் குறுகி, சுருங்கி சிரமப்படுகிறது.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நான் எளியவன். என்னால் மாற முடியாது. என்னை மாற்றிக் கொள்ளும் திறன் எனக்கில்லை என்பவற்றையெல்லாம் அன்னை ஏற்றுக்கொள்வதில்லை. மாற்றிக்கொள்ளும் முடிவுக்கு வாராதவர் சொல்லும் சொல் எனக் கருதுகிறார் அன்னை. அருள் ஒருவரை மாற்றும், திருத்தும், மாற வேண்டும் என்ற முடிவுக்கு வந்தவருக்கு மாற வேண்டிய திறனை அருள் அளிக்கும்.





## மனதில் உறுதி வேண்டும்

இல. சுந்தரி

“பெரியப்பா! எப்பொழுது வந்தீர்கள்?” என்று அன்பு பொங்க விசாரித்த வண்ணம் ஓடிவந்தாள் வந்தனா.

“நன்றாக இருக்கிறாயா குழந்தை? நான் நேற்று இரவே வந்து விட்டேன். அப்படியே வாசற்புறத்தில் படுத்துத் தூங்கிவிட்டேன்” என்றார் ராமகிருஷ்ணன் என்ற ராமு பெரியப்பா.

“ஏன் பெரியப்பா என்னை எழுப்பவில்லை?” என்றாள்.

நடு இரவில் வந்து எழுப்பினால் அவரவர் தூக்கம் கெடாதா என்ன?

பாவம் பெரியப்பா நீங்கள். எப்பொழுதோ ஒரு முறை வருகிறீர்கள். வரும்போதும் பசியும், பட்டினியுமாகத் தூங்க வேண்டுமா?

என்னைப் பெற்றத் தாய்கூட இப்படிக் கேட்டதில்லையம்மா. உனக்குப் பெரிய மனசு.

தாய்க்குப்பின் தாரம் என்பார்களே. நீங்களும் திருமணம் செய்து கொண்டிருந்தால் உங்கள் வரவிற்காக என் பெரியம்மா காத்துக் கொண்டிருந்திருப்பார்களல்லவா?

உண்மைதானம்மா. ஆனால் தன் நலத்தைப் பேண ஒரு பெண் காத்திருப்பது என்பதற்கல்ல திருமணம். சமூகத்திலுள்ள மனிதனுக்குத் திருமணம் பூரணம் தரலாம். மனத்தின் வளர்ச்சி சமூகத்திற்குட்பட்ட மனிதனுக்கு நட்பு பூரணம் தரலாம். உள்ளமும், மனமும் தெளிவுபெற்று வளர ஆரம்பித்தால் சிறந்த திருமண வாழ்வும், உயர்ந்த நட்பும் அவ்வுள்ளத்திற்கும், மனத்திற்கும் பயன்படா. சென்ற நூற்றாண்டின் நாகரீகம் இந்நூற்றாண்டிற்குப் பயன்படாதது போலத்தான் இதுவும்.

பிறகு, நிறைந்த மணவாழ்வு என்று ஏன் சொல்கிறார்கள்?

இறைவனைத் தவிர வேறொன்றில் முடிவைக் காண்பது அறியாமை. பணம், பதவி அதுபோன்று முடிவாகத் தோன்றுவது உணர்ச்சியின் மாயை. திருமணத்தையே முடிவாகக் காண்பது சமூக மாயையை ஏற்றுக்கொள்ளும் மனிதச்செயல். நட்பில் முடிவைக் காண முயல்வது உணர்ச்சியின் மாயையாகும்.

"பெரியப்பா, உங்கள் பேச்சு அற்புதமானது. நீங்கள் இங்கேயே இருந்தால் நான் எத்தனை நல்ல விஷயங்கள் தெரிந்து கொள்வேன். அதிருக்கட்டும், நீங்கள் குளித்துவிட்டு வாருங்கள் பெரியப்பா. சூடாக இட்லி வார்த்துத் தருகிறேன். சாப்பிட்டு விட்டு ரெஸ்ட் எடுத்துக் கொள்ளுங்கள். பொறுமையாகப் பேசுவோம்" என்றாள் வந்தனா.

காபி, பலகாரம், ரெஸ்ட் என்று எந்தப் பழக்கமும் எனக்கில்லையம்மா.

தெரியும் பெரியப்பா. ஆனால் எல்லோரும் அப்படித்தானே வாழ்கிறார்கள்?

அதெல்லாம் வெறும் பழக்கங்கள். நான் சாப்பிடுவதற்கு உயிர்வாழவில்லை. உயிர்வாழத்தான் சாப்பிடுகிறேன். அது எப்போது கிடைத்தாலும் பரவாயில்லை. பேசிக்கொண்டிருக்கும் போதே, சற்று இருங்கள் பெரியப்பா, இதோ வந்து விடுகிறேன் என்று கூறி அடுக்களைக்குச் சென்று சூடான இட்லி, சுவையான சட்னியுடன் வந்தாள்.

அவர் சாப்பிட்ட வண்ணம் நலம் விசாரித்தார்.

உனக்கு வரன் பார்க்கிறார்களா குழந்தை?

ஆமாம் பெரியப்பா, எனக்கு ஓரோர் நேரம் நானும் உங்களைப் போல் ஆணாகப் பிறந்திருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது.

ஏனம்மா அப்படிச் சொல்கிறாய்?

ஆமாம் பெரியப்பா, பெண்ணாய்ப் பிறந்தால் நம் நாட்டில் கல்யாணத்திற்குக் கட்டாயப்படுத்துவார்கள். உங்களைப் போல் ஆணாக இருந்தால் கட்டாயப்படுத்த முடியாதல்லவா?

அது ஆண்பெண் என்பதைப் பொறுத்ததல்ல. அவரவர் தேவையை, மனவுறுதியைப் பொறுத்ததம்மா.



எப்படிப் பெரியப்பா சொல்கிறீர்கள்?

ஆமாம்மா. தனித்திருக்கத் தைரியம் வேண்டும். அந்தத் தைரியமில்லாமல்தான் பல நேரங்களில் சமூகத்தை (அது தவறு செய்யும்போதும்) ஆதரிக்கிறோம். இது பகுத்தறிவோ, தர்க்கரீதியான எண்ணமோ, நியாய மனப்பான்மையோ அன்று.

இருந்தாலும் பெண்ணுக்குச் சுதந்திரம் இல்லை பெரியப்பா.

இதற்கு அதியற்புதமான வழியொன்றை ஒரு தெய்வத்தாய் கூறியிருக்கிறார். பெண்கள் தங்களைத் தாங்களே விடுவித்துக் கொண்டாலன்றி அவர்களை வேறு எந்தச் சட்டமும் விடுவிக்க இயலாது என்பதுதானது.

எப்படித் தங்களைத் தாங்களே விடுவித்துக் கொள்வது?

அவர்களை அடிமைப்படுத்துவன மூன்று. ஓர் ஆண்மகனிடத்து, அவன் வலிமையின்பால் ஏற்படும் கவர்ச்சி, இல்வாழ்க்கையிலும் அதன் பாதுகாப்பிலும் ஏற்படும் விருப்பம், தாய்மையில் பற்றுதல். இம்மூன்று தளைகளிலிருந்தும் விடுபட்டால் அவர்கள் உண்மையாகவே ஆண்களுக்கு நிகராக ஆவார்கள். ஆனால் ஆண்களும் மூன்று அடிமைத்தனங்களிலிருந்து விடுபட்டால் 'சரிநிகர் சமானமாக வாழ்வம்' என்பது நிகழ்ந்துவிடும்.

என்ன பெரியப்பா சொல்கிறீர்கள். ஆண்களுக்கும் மூன்று அடிமைத்தனங்களா?

ஆமாம் அம்மா. தன்னுடைமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மை, இனக்கவர்ச்சி, குடும்ப வாழ்வளிக்கும் சிறிய சௌகரியங்களில் நாட்டம்.

இப்படியவர்கள் உரையாடிக் கொண்டிருக்கும்போது, என்னடா அங்குக் குழந்தையிடம் பேச்சு? உன்னைப்போல் பொறுப்பில்லாத வாழ்க்கைக்குக் குழந்தையைத் தயார் செய்யாதே என்று அதிகார தோரணையில் கூறிக் கொண்டு வந்தாள் அவர் தாய் மீனாட்சி.

"அவள் என்னிடம் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொன்னேன்" என்றார் ராமு.

பாட்டிக்குப் பெரிய ஆதங்கம் தன் பெரிய பிள்ளை சாமியார்போல் பற்றற்றுத் திரிகிறானே என்று.

‘உன் தம்பி இல்லையா குடும்பப் பொறுப்புடன்? தாயை, தாரத்தை, மகளைப் பொறுப்பாகக் கவனிக்கவில்லையா?’ என்றாள் மேலும்.

‘இதென்னம்மா அதிசயம்? விலங்குகளும், பறவைகளும் கூடத் தன் குட்டிகளுக்கும், குஞ்சுகளுக்கும் உணவளிக்கின்றன. ஆனால் அங்கே எதிர்பார்ப்புகள் இல்லையே’ என்றார் ராமு.

‘ஏன்? எதிர்பார்ப்பதில் என்ன தவறு?’ என்றாள் சுரீரென.

‘தவறு என்று சொல்லவில்லையம்மா. எதிர்பார்ப்புகள்தாம் ஏமாற்றத்திற்கும், ஏக்கத்திற்கும் வழிவகுக்கும். கடமையைச் செய்து விட்டு நிம்மதியாக இருக்கத் தெரியவேண்டும். ஒரு வீடு கட்டுவதென்றால் எல்லோரும் கொத்தனார்களாய் இருந்தால் போதுமா? தச்சரும், பெயிண்ட்டரும், எலக்ட்ரீஷி-யனும் எல்லோரும்தான் வேண்டும். இல்லறமும், துறவறமும் இணைந்ததுதான் வாழ்வு என்று எத்தனை பேருக்குத் தெரியும்?’ என்றார்.

இது என்னடா புதுக்கதை? இல்லறம், துறவறம் இரண்டும் எதிரெதிரானவை. இரண்டும் எப்படி இணைய முடியும்?

இல்லறத்தைத் துறவறத்தின் தூய்மையோடு நடத்துவது. நம் உறவுகள் பாசத்தின் அடிப்படையிலும், பற்றுகளின் அடிப்-படையிலும் அமைந்தவை. அவை தெய்வீகத்தின் அடிப்படை-யில் அமைய வேண்டும். அப்போது அகந்தையின் வடிவான குடும்பம் கரைந்து தெய்வீக வாழ்வு அங்கேயே மலரும். மனத்தால் வாழும் உடல் ஆன்மாவால் வாழும் ஜீவனாகும், என்று சொல்லச் சொல்ல அவர் முகம் பிரகாசமானது.

‘என்னவோ போ. நீ பேசுவதொன்றும் எனக்குப் புரிய-வில்லை. பாசம், பற்று, கடமை எல்லாம் மனிததர்மம் தானே’ என்றாள் மீனாட்சி.

‘அம்மா, தர்மம் என்பதெல்லாம் மனிதன் தன் தேவைக்கு ஏற்படுத்திக் கொண்டதுதான். கடவுளால் படைக்கப்பட்டதன்று.



விதிகள் வகுக்காமல் வாழ மனிதனுக்குச் சுயக்கட்டுப்பாடு வேண்டும். அதுமுடியாமல்தான் விதிகளை வகுத்துக் கொள்கிறோம். வகுத்த பிறகும் உண்மையாக எத்தனைபேர் விதிகளை மனப்பூர்வமாய் ஏற்று நடக்கிறோம்’ என்றார்.

‘உன்னோடு பேச என்னால் முடியாது’ என்று விருட்டென்று உள்ளே போய்விட்டாள் மீனாட்சி.

அவர் பேசியவை அவருடைய தாய்க்கு விளங்கவில்லை. தாயினும் மேலாய் அவரை கவனித்த வந்தனாவுக்குப் புரிந்தது. பள்ளியிறுதி வகுப்பு முடித்துவிட்டு, குடும்பத்தார் பார்வையில் கல்யாணத்திற்குக் காத்திருக்கும் பெண் அவள். அவள் தன் சுயநோக்கில் பெரியதொரு வாழ்விற்குக் காத்திருப்பவள்.

“அதுசரி பெரியப்பா இம்முறை நீங்கள் எங்குச் சென்று வருகிறீர்கள், யாரைத் தரிசித்தீர்கள்? அதைக் கேட்க நான் ஆவலுடன் காத்திருக்கிறேன் பெரியப்பா” என்றாள் வந்தனா.

ஒவ்வொரு முறையும் இவர் யாரேனும் ஒரு மகானையோ, ஞானியையோ தரிசித்து அவருக்கு சேவை செய்த பாக்யத்துடன் வருவார். வீட்டில் இவர் தம்பியும், தம்பியின் மனைவியும், தாயும் ஆவலாக இவரை ஏதும் விசாரிக்கமாட்டார்கள். அவர் ஏதோ உதவாக்கரை போன்றும், தாங்களே பொறுப்புள்ளவர்கள் போலும் நடந்து கொள்வர். ஆனால் வந்தனா மட்டும் இவர் கொண்டுவரும் ஆன்மீக ஆஸ்த்தியை அவரிடம் பகிர்ந்து கொள்ளக் காத்திருப்பாள்.

அடடா! அந்த ஆனந்தத்தை உன்னிடம் கூறத்தான் வந்தேனம்மா. இம்முறை நான் அந்தப் பரமனையும், அவன் சக்தியையும் கண்டு பரவசமடைந்தேனம்மா. அன்று நான் புதுவை கடற்கரையில் அமர்ந்து நீலவானையும், நீலக் கடலையும் கண்டு அமைதியாய் இருந்தேன். அப்போது சற்றருகே இரண்டுபேர் அமர்ந்து பக்திப்பரவசத்துடன் உரை-யாடிக் கொண்டிருந்தனர்.

ஏன் பெரியப்பா புதுவை என்றாலே மது அருந்தச் செல்வதாக மட்டமாய் பேசுகின்றார்கள். நீங்கள் ஏன் அங்குப் போனீர்கள்.

நீ கேட்டதும் சரிதான். பொதுவாக மக்கள் சராசரி வாழ்வைத்-தான் அறிந்திருக்கிறார்கள். அரிதானவர்களே ஆன்மாவை நாடுகின்றார்கள். அதனால்தான் புதுவையில் மதி மயக்கும் மதுவைத் தவிர, மதியைத் தெளிவிக்கும் அருமருந்தும் உண்டென்பது அநேகர் அறியவில்லை. வேடிக்கை என்ன-வென்றால் வரும் வழியில் சிறிதுநேரம் கடற்கரையில் அமர்ந்தேன். அது இறைவனின் விருப்பம் என்பது பிறகுதான் புரிந்தது.

ஏதோ பக்தியாய் பேசிக்கொண்டார்கள் என்றீர்களே? அப்படி என்னதான் பேசினார்கள்.

ஓ அதுவா. ஒருவர் மற்றவரிடம், ‘அன்றைய தினத்தை எத்தனை பிறவிகள் எடுத்தாலும் மறவேன். அதிகாலையில் இருந்தே ஆசிரமம் சுறுசுறுப்பாய் இயங்கியது. குருதேவரின் தரிசனத்திற்குப் போகத் தயாராகிக் கொண்டிருந்தோம். ஒரு மனிதரைக் காண்பதற்கன்று. ஒரு பரமபுருஷரைத் தரிசிப்-பதற்கும் அன்று. இறைவனையே காணப் போகும் களிப்பு.

அதோ அவர் வராந்தாவிலுள்ள சிம்மாதனத்தில் ராஜ கம்பீரத்துடன் வீற்றிருக்கிறார். இளஞ்சிவப்புத் தாமரை மலர்களும், வெண்டாமரை மலர்களும் அணிந்து அமர்ந்திருக்-கிறார். அம்மலர்கள் சீடர்களின் எளிய காணிக்கை. அவர் பார்வை பரவசமூட்டுகிறது. அன்பையும், அருளையும் தெய்வத்துவத்தையும் இடைவிடாது பொழியும் அப்பார்வையை எப்படி மறக்கக்கூடும்?

பிறந்தநாள் பயனே இதுவல்லவா?’ என்று உருகியவண்ணம் விழிநீர் பெருகக் கூறிக் கொண்டிருந்தார்.

நான் மெல்ல நகர்ந்து அவர்களிடம் சென்றேன். அவர்கள் பேசிக்கொண்டிருந்ததை நான் கவனித்தேன் என்பதையும் அது பற்றி அறிய ஆவலாகவுள்ளேன் என்பதையும் கூறினேன்.

நான் யார் என அவர்கள் விசாரித்தனர். நான் மகான்களைத் தேடி வழிபடுகிறேன் என்பதைக் கூறினேன். என்னைப்பற்றித் தெரிந்து கொண்டதும் அவர்கள் தங்கள் குருநாதர்



ஸ்ரீ அரவிந்தரின் பிறந்தநாளில் அவரைத் தரிசித்த அனுபவத்தைப் பேசிக் கொண்டதாகக் கூறினர்.

எனக்கும் அவரைத் தரிசிக்க ஆவலாயுள்ளதைக் கூறினேன். மறுநாள் அரவிந்த ஆசிரமத்திற்குக் காலையிலேயே வருமாறும் பாக்கியமிருந்தால் தரிசனம் கிடைக்கலாம் எனவும் கூறினர். அவர்கள் ஆசிரமத்துச் சாதகர்கள் எனத் தெரியவந்தது. மறுநாள் காலை தவறாது போய் ஆசிரம வாயிலில் காத்திருந்தேன். அந்தச் சாதகரில் ஒருவர் வெளியே வந்து யாரையோ தேடுவதுபோல் பார்க்க, நான் அவர் கண்ணில் பட்டவுடன் ‘உங்களைத்தான் தேடினேன். உள்ளே வாருங்கள் உங்களுக்கு இன்று தரிசனம் உண்டு. ஆனால் அது உங்கள் பொருட்டன்று என பகவான் கூறினார்’. எனக்கு எதுவும் விளங்கவில்லை. ‘ஏன் அப்படிக் கூறினார் என்பது போகப்போகதான் தெரியும்’ என்றார்.

அவருடன் சென்றேன். வரிசையில் நின்றேன். ஸ்ரீ அரவிந்தரும், அவருக்கு வலப்பக்கத்தில் ஸ்ரீ அன்னை என்பவரும் அமர்ந்-திருந்தனர். மக்கள் பக்தியுடனும் பரவசத்துடனும் அவரிடம் ஆசி பெற்று வரிசையாகச் சென்ற வண்ணமிருந்தனர். என் முறை வந்தது. என்னவென்று விவரிக்கவியலாத ஒரு பேருணர்வு என்னைச் சூழ்வதை உணர்ந்தேன். ஒரு ஒளிவெள்ளம் என்மீது பாய்வது போலிருந்தது. கண்ணைக் கூசும் ஒளி அது. நகர்ந்து வந்தபின் ஓரிடமாக அமர்ந்துவிட்டேன். அவர்கள்முன் லேசாகிக் காற்றில் பறப்பதைப்போல் உணர்ந்தேன். அகன்றபின்போ ஒரே பாரமாய் உணர்ந்தேன். அங்கு தெய்வீகச் சூழல் அலை மோதிக் கொண்டிருந்தது.

‘அவர்களிடம் பெற்ற பிரசாதம் இது. ஏனோ இதை உன்னிடம் தரவேண்டும் எனத் தோன்றிய வண்ணமுள்ளதால் இதைக் கொடுத்து விட்டுப்போகவே வந்தேனம்மா’ என்று உலர்ந்த ரோஜாப்பூ ஒன்று வைக்கப்பட்ட கவரை அவளிடம் கொடுத்தார்.

‘பெரியப்பா நீங்கள் கூறியவற்றையெல்லாம் கேட்டபோது நானே அவற்றைக் காண்பதுபோல் உணர்ந்தேன். நீங்கள் தந்த இந்தப் பிரசாதம் எனக்கென்றே அந்தத் தெய்வங்களால் அனுப்பப்பட்டதோ என்று தோன்றுகிறது பெரியப்பா’ என்றாள்.

‘இருக்கலாம் குழந்தை. இந்தத் தரிசனம் உங்கள் பொருட்டன்று என ஸ்ரீ அரவிந்தர் கூறினாராமே. ஒரு வேளை அதன் பொருள் இதுவோ’ என்று நெகிழ்ந்தார்.

‘அவர்கள் யார் பெரியப்பா? முன்பு நீங்கள் எத்தனையோ மகான்களைத் தரிசித்து வந்து சொல்வீர்களே அவர்களைப் போன்றவர்களா?’ என்றாள்.

இல்லையம்மா. இவர்களை யாருடனும் ஒப்பிட முடியாது. இவர்கள் நம் பொருட்டுச் செய்யும் யோகத்திற்குப் பூரண யோகம் என்று பெயர். புதுமையானது. இவர்களைப் பின்பற்ற, நாட்டைத் துறந்து காட்டிற்குப் போகவேண்டாம். புலன்களை அவிக்க வேண்டாம். நமது செயல்களையெல்லாம் இறைவனுக்கு வேள்வியாக ஆக்குதல், மனிதனிலுள்ள உண்மையான ஆத்மாவை வெளிப்படுத்துதல், வாழ்வு முழுவதையும் யோகமாக்குதல் என்பதே இவர்கள் யோகம்.

புதுமையாக இருக்கிறதே. ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் என்றீர்களே. அவர்கள் இருவரா?

‘ஆமாம் அம்மா. அதையெல்லாம் கேட்டால் அசந்து போவாய்’ என்றார் உற்சாகமாக.

சொல்லுங்கள் பெரியப்பா, அவர்கள் யார்?

ஒருவர் நம் சுதந்தரப் போராட்ட வீரராய் உலகம் கண்ட ஸ்ரீ அரவிந்தர். மற்றவர் பாரிஸ் மாநகரில் செல்வக் குடும்பத்தின் செல்வமாய் அவதரித்து குழந்தைப் பருவத்திலேயே ஆன்ம நாட்டத்துடன் உருவானார்.

அப்படியென்றால் இருவரும் மனிதர்களாகத் தோன்றிய மகான்களா? என்றாள்.

இல்லையில்லை. நம் சாதாரண மனநிலையில்தான் அவர்கள் மனிதர்கள். ஆன்ம விழிப்போடு, பக்திப்பரவசத்தோடு உணரும் போது அவர்கள் மானுடர்களேயல்லர் என்ற உண்மை புரியும்.

அது எப்படிப் பெரியப்பா? ஆன்ம விழிப்பு என்பது பெரிய விஷயமல்லவா? நமக்கு ஆன்மாவையே தெரியாது. பின் அது விழிப்பது எப்படி?



இதோ, இப்படி அறிந்து கொள்ளும் ஆர்வமும், வாய்ப்பும் வருகிறது எனில், அவர்களுக்கு இறைவன் அதை உணர்த்தப் போகிறான் என்று அர்த்தம்.

அது சரி பெரியப்பா சாமான்யர்கள் அவர்களைப் புரிந்து கொள்வது எப்படி?

‘அவனருளாலே அவன் தாள் வணங்கி’ என்று பெரியவர்கள் சொல்வார்கள் அல்லவா? அது உண்மைதான். ஒருகால கட்டத்தில், அன்னை யார்? என்ற கேள்வி சாதகர்களுக்கு எழுந்தது. அப்போது ஸ்ரீ அரவிந்தர் யோகத்தில் தீவிரமாய் ஈடுபட்டிருந்தார். யோகத்தின் முதிர்ச்சியான திருஷ்டிக்குத்தான் அன்னையின் தெய்வத்வம் புலப்படும். அவர்தாம், ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம் என எடுத்துரைத்தார்.

அதுபோல் ஒருமுறை ஸ்ரீ அரவிந்தர் யார்? என்ற கேள்வி எழுந்தபோது, ‘அவர் இறைவனின் பகுதி’ என்று ஸ்ரீ அன்னை தாம் கூறினாராம், என்றார்.

ஆக அவர்களை அவர்களே அறிவார்கள் என்பதுதான் உண்மை என்றாள் வந்தனா.

பரிசுத்தமான உள்ளத்துடன் அவர்களை அணுகுபவர்கள் அந்த உண்மையை உணர முடியும்.

‘பெரியப்பா நானும் அவர்களைத் தரிசிக்கக்கூடுமா? இதற்குத்தான் ஆணாய்ப் பிறக்க வேண்டும் என்பது’ என்றாள் வந்தனா.

இல்லை வந்தனா. அதற்கு ஆணாகப் பிறக்க வேண்டியது இல்லையம்மா. ஸ்ரீ அன்னை பெண்களைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? ‘ஆண்களைவிட இளம் பெண்கள் திறமைசாலிகள். ஆன்மீக வளர்ச்சியில் பெண்களுக்கு ஒரு சாதகமான அம்சம் இருக்கிறது. ஏனெனில் அவர்களுடைய இதயமையம் அதிகமாகத் திறந்திருக்கிறது’ என்கிறார். உன் ஆர்வம் தீவிரமானால் அவர்களே உனக்குத் தரிசனத்திற்கு வழிவகுப்பார்கள் என்றார்.

அவ்வளவுதான் வந்த வேலை முடிந்தது என்பதுபோல்

அன்றிரவே சொல்லாமல் கொள்ளாமல் (எதையும் எடுத்துக் கொள்ளாமல்) காணாமற் போனார்.

அவர் கொடுத்த அருட்பிரசாதமும், கூறிய கருத்துகளும் ஆழப்பதிந்தன. வந்தனாவிற்கு எல்லாம் உள்ளே நிகழ்வன. அவளுக்கு வெளியே (புறத்தில்) எந்த மாறுதலும் இல்லை. ஸ்ரீ அரவிந்தரும், ஸ்ரீ அன்னையும் வீற்றிருப்பது போலவும், அவர்கள்முன் சென்று இவள் வணங்குவது போலவும், சதா கற்பனை செய்ய ஆரம்பித்தாள். மகிழ்ச்சியாக இருந்தது. பெண்கள் மூன்று அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டால் ஆண்களுக்கு நிகராகலாம் என்று ஸ்ரீ அன்னை கூறியிருக்கிறாராமே என்று எண்ணிப் பார்த்தாள். என் ஆர்வம் தீவிரம் அடைந்தால் நான் அவர்களைத் தரிசிக்க அவர்களே வழி வகுப்பார்கள் என்று பெரியப்பா சொன்னாரே. எனக்கு நாளுக்குநாள் அவர்களைத் தரிசிக்க ஆவலாக இருக்கிறதே. பெரியப்பா ஏன் என்னிடம் சொல்லாமல் போனார். சொல்லியிருந்தால் நானும் அவருடனேயே சென்றிருப்பேனல்லவா என்று தனக்குத்தானே பேசிக் கொண்டாள்.

‘வந்தனா, தனியே உட்கார்ந்து அங்கே என்ன பேசிக் கொள்கிறாய்?’ என்றாள் மீனாட்சிப் பாட்டி.

‘ஒன்றுமில்லை பாட்டி, பெரியப்பா வந்தாரே திடீரென்று சொல்லாமலே போய்விட்டாரே என்று நினைத்தேன்’ என்றாள் வந்தனா.

‘ஆமாம். இது என்ன புதுசா? இப்படித்தான் திடீர் திடீரென வருகிறான், போகிறான். அவனை யார் கேட்பது’ என்றாள். அத்துடன் நில்லாமல் ‘நல்ல வேளை நீ பெண்ணாய்ப் பிறந்தாய் இல்லையென்றால் நீயும் அவனுடன் போனாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை’ என்று கூறிக் கொண்டாள்.

ஓ, பாட்டி உங்களுக்கு இப்படி ஒரு நினைப்பா. ஆண்களுக்கு நிகராகும் வழியை ஸ்ரீ அன்னை பெரியப்பா மூலம் எனக்குச் சொல்லியனுப்பியிருக்கிறார் என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்டாள் வந்தனா.



உறவினர் வீட்டுத் திருமணம் ஒன்று புதுவையில் நடப்பதாக இவள் பெற்றோர்க்கு அழைப்பு வந்தது. அங்கு போவதுபற்றி இவள் பெற்றோரும், பாட்டியும் பேசிக் கொண்டார்கள். புதுவை என்ற சொல் கேட்டாலே இவளுக்கு ஆர்வம் எழுகிறது. பெரும்பாலும் இவளைப் பாட்டியுடன் வீட்டில் விட்டுச் செல்வதுதான் வழக்கம். இம்முறை இவள் தானும் வருவதாகச் சொன்னாள். பாட்டியும் பரிந்துரை செய்தார். கேட்க வேண்டுமா மகிழ்ச்சியை, இதற்குமுன் இவள் இவ்வளவு ஆர்வமாய் எங்கும் கிளம்பியதில்லை.

புதுவை மண்ணில் காலடி வைத்ததுமே தன் வாழ்வின் லட்சியத்திற்கு அடிக்கல் நாட்டிவிட்டதாகத் தோன்றியது. திருமண வீட்டில் இவளுக்கு உள்ளூர்ப் பெண்ணின் சிநேகிதம் கிடைத்தது. தன்னுள்ளம் கொண்ட ஆவலை அதாவது ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரைத் தரிசிக்கும் ஆர்வத்தைச் சிறிதும் வெளியிடாமல் பொக்கிஷமாய்ப் பாதுகாத்தாள். உள்ளூர் சுற்றிப் பார்க்க இவளை இவள் சிநேகிதி பெற்றோர் அனுமதியுடன் அழைத்துச் சென்றாள்.

மாலை நேரம் அவர்கள் ஒரு மைதானத்தின் வழியே சென்ற போது ஒரு கார் வந்து மைதானத்திற்குள் செல்லும் வாயிலில் நின்றது. வந்தனாவின் மனம் ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தரைக் காண்பதில் உள்ளூர எழும் ஆவலால் போவார் வருவோரிலெல்லாம் அவர்களைத் தேடவாரம்பித்தாள். பிறகு தெய்வீகர்களான அவர்களைத் தெருவிலெல்லாம் தேடும் தன் அறியாமைக்கு வெட்கப்பட்டாள். உன் ஆர்வம் தீவிரமானால் அவர்களே தரிசனத்திற்கு வழிவகுப்பர் என்று பெரியப்பா கூறியதையும் நினைவுபடுத்திக் கொண்டாள்.

மைதான வாயிலில் நின்ற காரிலிருந்து, மேலை நாகரீகத்தில் உடையணிந்த ஒரு பெண்மணி டென்னிஸ் ராக்கெட்டுடன் இறங்கினார். மலைத்துப்போய் அவரை வேடிக்கைப் பார்த்த வண்ணம் நின்றாள் வந்தனா. ஆனால் மின்னலைவிட விரைவாக உள்ளே சென்ற அவர் போகும் போக்கில் ஒரு புன்னகையால் அவளை வசீகரித்துச் சென்றார்.

‘என்ன வந்தனா இப்படி மலைத்துப் போய் நிற்கிறாய்?’ என்றாள் உடன் வந்த தோழி.

‘இப்பொழுது ரம்யமாய் ஒருவர் மைதானத்திற்குள் சென்றாரே அவரைப் பார்த்துத்தான் மலைத்துப்போய் நிற்கிறேன்’ என்றாள் வந்தனா.

‘இதில் மலைப்பதற்கு என்ன இருக்கிறது? இது புதுவை மாநிலம். பிரெஞ்சுக்காரர்கள் வாழும் ஊர். அவர்கள் இப்படி நாகரிக உடையணிந்து விளையாடச் செல்வது சகஜம்’ என்றாள்.

‘நான் அதைக் கண்டு மலைக்கவில்லை. அவர் வசீகரமான கடைக்கண் பார்வையைக் கண்டு மலைத்து விட்டேன்’ என்றாள் வந்தனா.

‘இதில் வேடிக்கை என்னவென்றால் இவர்தாம் அரவிந்தாசிரமத்து ஸ்ரீ அன்னை. இவரைப்போய் பராசக்தி என்பார்கள் அங்குள்ளவர்கள்’ என்று தன் பேதமையை மேதைமையாய் வெளியிட்டாள் தோழி.

ஓ! அதுதான் தன்னை அப்படிக் கவர்ந்திழுத்ததா என்று இன்னும் சற்றுத் தெளிவாகப் பார்க்கவில்லையே என்ற ஏக்கம் எழுந்தது வந்தனாவிற்கு. இதை ஏன் நீ முன்பே சொல்லவில்லை? என்றாள் வந்தனா.

ஏன் சொல்லியிருந்தால் அவர் காலில் விழுந்து வணங்கியிருப்பாயோ? என்று கேலி செய்தாள் தோழி.

மனிதர்கள் மூடமாய் இருப்பது என்பது இதுதானோ? இந்தவூரிலேயே இருக்கிறாள். கண் மூடியாய் பேசுகிறாளே என்று தோன்றியது. அத்துடன் தன் ஆன்மா விழிப்பாக இருப்பதும் புரிந்தது.

‘தெய்வத்தை நிந்திப்பது தவறு மாலா’ என்றாள் வந்தனா.

‘இப்படித்தான் தெய்வம் கால்சட்டை அணிந்து டென்னிஸ் விளையாடுமா?’ என்றாள் தோழி.

‘தெய்வம் எல்லாம் வல்லது என்பது உண்மையானால் இதுவும் உண்மைதான்’ என்றாள் வந்தனா.



‘சரி, அப்படியென்றால் இன்று உனக்குத் தெய்வதரிசனம் கிடைத்தது என்று வைத்துக் கொள்வோம்’ என்றாள் தோழி வேடிக்கையாக.

சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நான் தேடியதை இன்று கண்டுகொண்டேன் என்பது இவளுக்கு எப்படித் தெரியும் என்று நினைத்துக் கொண்டாள் வந்தனா.

சரி, சரி வா. என்று மேலும் நடையைத் தொடர்ந்தனர். அடுத்தது மணக்குள விநாயகர் கோயிலுக்கு அழைத்துப் போனாள் தோழி.

வந்தனாவுக்கு என்னாயிற்று? சுயநினைவு போய்விட்டதா? விநாயகரை வணங்கவும் தோன்றவில்லையா?

வா வந்தனா. சுவாமியைப் பார் என்ன வேண்டுமோ வேண்டிக்கொள். சக்தி வாய்ந்த பிள்ளையார் என்றாள் தோழி. ஸ்ரீ அன்னையைக் காணும்முன் இங்கு வந்திருந்தால் அவரைக் காண அருள் செய்யுங்கள் என்று வேண்டியிருப்பாள். இப்போது அவளுக்கு எவரிடமும் வேண்டுதல் இல்லை.

வெளியே வந்து இடப்புறம் உள்ள தெருவில் திரும்பினார்கள். அங்கே அந்தப் பெரியக் கட்டிடம் தெரிந்தது. அதுதான் அரவிந்தாசிரமம். சற்றுமுன் மைதானத்தில் பார்த்த கார் வந்து நின்றது. அதே கார். அங்குத் தன்னை பிரமிப்பில் ஆழ்த்திச் சென்ற அந்த ஸ்ரீ அன்னை அதில் இருப்பாரோ. கோவிலுக்கு வெளியே யாரோ தெரிந்தவருடன் தோழி பேசிக்கொண்டிருந்தாள்.

வந்தனா ஓடிச்சென்று அந்தக் காருக்குச் சற்று தூரத்தில் அதிலிருந்து இறங்குபவரைப் பார்க்கக்கூடிய இடத்தில் நின்று விட்டாள். புன்னகையுடன் இறங்கி உள்ளே சென்று விட்டார். இம்முறை அவள் அவரை நன்றாகவே பார்த்தாள். அவர் பார்வையின் ஆழம் அவள் இதயத்தை எட்டியிருக்க வேண்டும். இதயம் நிறைந்தது.

‘என்னாயிற்று வந்தனா? என்னைப் பாதியில் விட்டுவிட்டு வந்துவிட்டாய்’ என்றாள் தோழி.

‘நமக்குரியது கிடைத்துவிட்டால் எல்லாவற்றையும் பாதியில் விட்டுவிடுவோம்’ என்றாள் வந்தனா.

‘என்ன சொல்கிறாய் வந்தனா? நீ சொல்வது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை’ என்றாள் தோழி.

‘அது சொல்லி விளக்குவதல்ல சொல்லாமல் விளங்கிக் கொள்வது’ என்றாள் வந்தனா.

‘எனக்கொன்றும் விளங்க வேண்டாம். நேரமாகி விட்டது வா போகலாம்’ என்றாள்.

அன்றிரவே புதுவையை விட்டுப் புறப்பட்டனர்.

உள்ளூரில் இருந்தால் எப்படியும் ஒரு முறையேனும் ஸ்ரீ அன்னையைக் காண வாய்ப்பிருக்கும். இனி அது கிடையாது என்பது அவளுக்கு ஏக்கமாக இருந்தது. ‘இந்தவூர் எனக்கு மிகவும் பிடித்துவிட்டதம்மா’ என்று அம்மாவிடம் கூறினாள்.

அதற்கென்ன இந்தவூரிலேயே மாப்பிள்ளை பார்த்தால் ஆயிற்று என்று சிரித்துக்கொண்டே கூறினாள் அம்மா. ஒரு ஆணின்பால், அவன் வலிமையின்பால் ஈடுபாடு கொள்ளும் அடிமைத்தளையல்லவா அது என்று அவள் உள்ளம் எண்ணலாயிற்று. ஆனாலும் எடுத்துச் சொல்லுமளவு துணிவு இல்லை.

அன்னையைத் தரிசித்த பிறகு உடலிலும் உணர்விலும் பரிசுத்த பரவசம் நிறைந்திருக்கிறது. பெரியப்பாவின் தரிசன அனுபவம் நினைவுக்கு வந்தது. தரிசனம் உம்பொருட்டு அன்று என ஸ்ரீ அரவிந்தர் கூறினாராமே. வேறு யார் பொருட்டு அது. ஒரு வேளை அது என் பொருட்டோ. இவ்விதமான சிந்தனைகளில் அடிக்கடி ஆழ்ந்து விடுவாள்.

இவள் பெற்றோர் இவள் திருமணம்பற்றி தீவிர முயற்சி மேற்கொண்டவண்ணமிருந்தனர். ஒரு நாள் திடீரென பெண் பார்க்கும் படலமும் ஏற்பாடாயிற்று. சலனமின்றி எப்படி அவளால் இருக்க முடிந்தது? விந்தைதான்.

பொம்மைபோல பெரியவர்கள் இயக்கியபடியெல்லாம் இயங்கினாள். சுந்தரர் திருமணத்தின் போது இறைவன் அடிமையோலை காட்டித் தடுத்தாட்கொண்டதுபோல் தன்னையும் ஸ்ரீ அன்னை ஆட்கொள்வாரோ என்று கூட ஒரு எண்ணம் உதித்தது. மாப்பிள்ளையாக வரப்போகும் வரனை அவள் நமஸ்கரிக்கும் கட்டம் வந்தது. அன்று அவள் புதுவை மைதானத்தில் கையில் டென்னிஸ் ராக்கெட்டுடன் தரிசித்த அந்தத் திருவுருவை உள்ளத்தே எண்ணிக் கொண்டு அவருக்கே தன் நமஸ்காரத்தைச் சமர்ப்பணம் செய்தாள். தன் முன்னின்ற ஓராடவர் அவள் கண்ணிலும், நெஞ்சிலும் இடம் பெறவில்லை.

பிள்ளை வீட்டாருக்கோ வந்தனாவை மிகவும் பிடித்து விட்டது. வந்தனாவின் பெற்றோர்க்கும் பிள்ளையைப் பிடித்து விட்டது. அக்காலங்களில் பெண்ணின் விருப்பம் என்பது பெரிதாகக் கருதப்படுவதில்லை. பெற்றோர் பெண்ணுக்கு நல்லதையே செய்வர் என்ற அடிப்படையில் திருமணங்கள் நிச்சயிக்கப்பட்டன.

பெற்றோர் ஓயாது திருமண ஏற்பாடுகளில் ஆழ்ந்திருக்க, வந்தனாவோ, தான்தான் மணப்பெண் என்ற எண்ணமேயில்லா-திருந்தாள்.

மணநாளும் வந்தது. பிள்ளை வீட்டினரும், உற்றார் உறவினரும், ஊராரும் கூடி சடங்குகளை நிகழ்த்திய வண்ணம் இருந்தனர். வந்தனாவிற்குப் பெரியப்பாவின் நினைவு வந்தது. மூன்று அடிமைத் தளைகளிலிருந்து விடுபட்டால் பெண்கள் ஆண்களுக்கு நிகராகலாம் என்றும், பெண்கள் தாங்களே தங்களை விடுவித்துக் கொண்டாலன்றி வேறு எந்தச் சட்டமும் அவர்களை விடுவிக்க இயலாது என்றும் ஸ்ரீ அன்னை கூறியிருக்கிறாராமே.

திடீரென மணவீட்டின் மகிழ்ச்சியை விழுங்கிக் கொண்டு பிணவீட்டின் ஓலம் எழுந்தது. இவள் பெரியப்பா இறைவனடி அடைந்த செய்தி யார் வாயிலாகவோ வந்திருக்கிறது. அவர் உயிருடன் இருந்த போதெல்லாம் அவரைக் கரித்துக் கொட்டிய மீனாட்சி அவர் இல்லாமல் போனவுடன் கசிந்தழுதாள். பெயர்த்தியின் திருமண மகிழ்வைவிட, அவள் மன ஆழத்தில் இருந்த மகன்மீது கொண்ட பற்று இப்போது வெளிப்பட்டது.

இவள் தந்தைக்கு மகளின் திருமணம் தடைபடுவது வருத்தம் ஒருபுறம். உடன் பிறந்தவரின் மரணம் ஏற்படுத்தும் வேதனை ஒருபுறம். நிலை தடுமாறினார். பெரியப்பாவின் பையிலிருந்து கிடைத்த நாட்குறிப்புப் புத்தகத்திலிருந்து இவர்கள் வீட்டை அடையாளம் கண்டு அவர் உடல் இங்கு கொண்டு வரப்பட்டது.

இதுவரை மணவறையில் அமர்ந்து வெளியில் நடப்பது இன்னதென்று அறியாதிருந்த வந்தனாவுக்கு இப்பொழுது விஷயம் தெரிந்துவிட்டது.

'ஆசிகூற எப்படியும் வருவீர்கள் என்று எண்ணியிருந்தேனே பெரியப்பா. ஈஸ்வர சம்பத்தை இடையறாது கொண்டு தருவீர்களே பெரியப்பா. இனி யார் எனக்கு அதைக் கொடுப்பார்?' என்று தேம்பியழுதாள் குழந்தை.

இதற்கு மற்றொருபுறம் மணமகன் கோலத்தில் அமர்ந்திருந்த மாப்பிள்ளை பையன் வலிப்பு வந்து விழுந்து துடித்தான். மாப்பிளை வீட்டார் முகம் விழுந்தது.

பேரிடியின் பின் பேரதிர்ஷ்டம் என்பாரே பகவான், அது வந்தனாவிற்குக் கிடைக்க அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டது என்பதையறிய சூட்சுமம் உள்ளவர் ஒருவருமிலர்.

திருமணம் நின்றுவிட்டதே என்று வருந்திய இவள் தந்தை வலிப்பு நோயுள்ள வரனை ஏமாற்றி இவளுடன் மணமுடிக்க வந்த வஞ்சனையிலிருந்து விடுபட்டோம் என்ற நிம்மதியும் உணர்ந்தார். இந்நிலையில் ஒன்றும் கூறமுடியாதிருந்தார்.

கருமகாரியங்கள் முடிந்ததும் யாவரும் பெரியப்பாவை மறந்து இயல்பான வாழ்விற்குத் திரும்பிவிட்டனர். வந்தனா மட்டும் அவரைப்பற்றிய நினைவுகளிலிருந்து மீளவில்லை. அவர் பையிலிருந்து எடுக்கப்பட்ட டைரி, பேனா, 'தி மதர்' என்ற புத்தகம் மூன்றும் வந்தனா பத்திரமாக எடுத்து வைத்துக் கொண்டாள். 'தி மதர்' என்ற புத்தகத்தின் உள் அட்டையில் வந்தனாவுக்குப் பெரியப்பாவின் அன்பளிப்பு என்று அழகாக எழுதப்பட்டிருந்தது. தன்னை அன்னையிடம் ஒப்படைத்து விட்டாரோ என்று எண்ணத் தோன்றியது.



அந்தப் புத்தகத்தைத் தன் உற்ற தோழியாய்க் கருதி அதனுடன் ஒன்றிப் போனாள்.

திருமணம் நின்று போனதால் ராசியில்லாத பெண் என்று மறுபரிசீலனையின்றி முத்திரை இடப்பட்டாள். இது அந்தக் காலச்சட்டம். அந்த இளம் பெண்ணின் வாழ்க்கையின்பம் பறிபோனதாகப் பெற்றோர் நைந்தனர். ஆனால் மிகப்பெரும் தளையிலிருந்து தன்னை மீட்ட பெரியப்பா என்றுமே தன் உதவியாளர்தாம் என்றெண்ணினாள் வந்தனா.

இவர் தந்தை அவரைத் திட்டினார். 'ஏனப்பா எப்பொழுதும் பெரியப்பாவை திட்டுகீறீர்கள்? அவர் நல்லவர்' என்றாள் வந்தனா.

'என்ன பெரிய நல்லவர்? செத்தும் கொடுத்தான் சீதக்காதி என்பார்கள் செத்தும் கெடுத்தான் பெரியப்பா என்ற பேரைப் பெற்றான்' என்று சலித்துக் கொண்டார்.

'அப்படிச் சொல்லாதே. நாம்தான் வலிப்பு வந்த பிள்ளை-யிடம் நம் குழந்தையைப் பலியிடாமல் தப்பித்தோம்' என்றாள் பாட்டி. வந்தனா எவ்வித இழப்புமின்றி ஸ்ரீ அன்னையை அடிக்கடி தழுவிக் கொள்கிறாள். சின்னஞ்சிறு குழந்தையாய் மாறி அன்னையின் மடியில் தவழ்கிறாள்.

ஆசிரமத்தில் அன்னை தம் அன்புக் குழந்தைகள் நடுவே வீற்றிருக்கும் போது உடல் சிலிர்க்கிறார். தாமே புன்னகைத்துக் கொள்கிறார். என்ன அன்னையே? புன்னகைக்கிறீர்கள் என்று அவர்கள் கேட்கும் கேள்விக்கு அன்னை பொறுமையுடன் பதிலளிக்கிறார். என் பக்தை ஒருத்தி குழந்தை உள்ளத்துடன் அடிக்கடி என்னைத் தழுவிக் கொள்கிறாள், அதை ரசிக்கிறேன் என்கிறார்.

இவள் அப்பாவைப் பார்த்து ஆறுதல் கூற நண்பர் ஒருவர் வந்தார்.

என்னப்பா சோர்வாயிருக்கிறாய்? சோர்வுக்கு இடமளிக்கக் கூடாது. அது நம்மை வீழ்த்த இடம் தரக் கூடாது. உனக்கு மறுப்பில்லை என்றால் நான் ஒன்று சொல்வேன் என்றார்.

‘சரி சொல் மனம் நிம்மதியிழந்து விட்டது. ஏதேனும் மாறுதல் வேண்டும்’ என்றார் அப்பா.

‘பாண்டிச்சேரியில் பகவான் ஸ்ரீ அரவிந்தர் உலக நன்மைக்குத்தான், மனிதகுல உயர்வுக்குத்தான் யோகம் செய்கிறார். பாராசக்தியே அவருக்கு உறுதுணையாய் அங்கு இருக்கிறார். அவர்களை ஒருமுறை குழந்தையுடன் சென்று தரிசித்து வந்தால் எல்லாம் சரியாகிவிடும்’ என்றார்.

ஆகா! வந்தனாவின் செவியில் இது இன்பத்தேனாய் வந்து பாய்கிறது. உன் ஆர்வம் தீவிரமானால் அவர்களே தரிசனம் தர ஏற்பாடு செய்வார்கள் என்ற பெரியப்பாவின் பேச்சும் காதில் ஒலித்தவண்ணமிருந்தது.

‘ஆகட்டுமப்பா, ஒரு முறை போய் வருகிறேன்’ என்றார். இது சற்றும் எதிர்பார்க்காதது. அப்பாவிற்கு ஆசிரமம் என்பதெல்லாம் பிடிக்காது. தன் தாயாரிடமும், மனைவியிடமும் கலந்து பேசி தாமும் வந்தனாவும் ஒரு முறை அரவிந்தாசிரமம் சென்று பகவானைத் தரிசித்து வருவதாக முடிவு செய்தார்.

ஆக வந்தனாவை வீட்டாரே விரும்பி அனுப்பி வைக்கும் சூழல் உருவாயிற்று. இனி அவள் பங்கு என்ன என்பதை நினைவுப்படுத்திக் கொண்டாள். ‘கல்யாணம் என்பது கட்டாயமில்லை. அது ஆண், பெண் என்பதாலன்று. அது அவரவர் தேவையையும், மனவுறுதியையும் பொறுத்தது என்று பெரியப்பா சொன்னாரே. இப்போது எனக்கு மனவுறுதிதான் தேவை’ என்று கூறிக் கொண்டாள்.

வந்தனாவும் அவள் அப்பாவும் சென்றனர். நண்பர் உதவியால் தரிசனத்திற்கு அனுமதியும் கிடைத்தது. வரிசையில் இருவரும் நின்றனர். அவள் அப்பா அவளுக்கு நல்ல வாழ்வினைத் தருமாறு உள்ளூரப் பிரார்த்தித்த வண்ணம் நின்றார். இவளோ, ‘அன்னையே என்னை எடுத்துக் கொண்டுவிடுங்கள். திருப்பி அனுப்பி விடாதீர்’ என்று வேண்டியவண்ணமிருந்தாள். வரிசை நகர்ந்தது. இவள் தந்தையின் முறை வந்தது ஆசி பெற்றார். பகவான் விழிகளின்



ஆழ்ந்த பார்வையும், ஸ்ரீ அன்னையின் குழந்தைச் சிரிப்பும் அவருக்கு வந்த நோக்கமே மறந்துவிட்டது. தரிசனம் பெற்று நகர்ந்து விட்டார். வந்தனாவின் முறை வந்தது. ஸ்ரீ அன்னையை இவ்வளவு நெருக்கமாகத் தரிசிப்போம் என்று எண்ண முடியாத சூழலில் இருந்தாள். இப்பொழுதோ அந்தத் திருவடிகள் அவளுக்குக் கிடைத்து விட்டது. தேம்பியழுதாள். ஸ்ரீ அன்னையும், பகவானும் மெல்ல அவள் தலையில் கைவைத்து ஆசிர்வதிக்க உள்ளே பேரலை ஒன்றெழுந்து ஆர்ப்பரித்து அடங்கி அமைதியானது. மெல்ல எழுந்தவள் ஸ்ரீ அன்னையை என்னைக் கைவிட வேண்டாம் என்பதுபோல் ஏக்கத்துடன் பார்த்தாள்.

அன்னை உடனேயே, ‘இவள் இங்கேயே இருக்கட்டும்’ என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டார். ஆனந்தம் வந்து அவளை அணைத்துக்கொண்டது. அவருக்குப் பக்கத்தில் அப்படியே நின்றுவிட்டாள். தரிசனம் முடிந்து யாவரும் வெளியேறிவிட்டனர். மிகத்தொலைவில் நின்று கொண்டு இவளுக்காக இவள் அப்பா காத்துக் கொண்டிருந்தார்.

ஸ்ரீ அன்னை, பகவானிடம் இவளை இங்கே அனுமதிக்க வேண்டும் என்றார். அவள் மஞ்சள் ரோஜா வைத்திருக்கிறாளா என்றார் கனிவாக. அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்தனர்.

பெரியப்பா தன்னிடம் கொடுத்த உலர்ந்த மஞ்சள் ரோஜா சட்டென்று நினைவுக்கு வர மெய் சிலிர்த்தாள்.

‘ஒரு சாதகரை அழைத்து இவள் இங்கேயே தங்கிவிட ஏற்பாடு செய்து கொடு’ என்று கூறினார். பகவானும், அன்னையும் உள்ளே சென்றபின்னும் இது கனவா, நனவா என்று திகைத்து நின்றாள் .

ஐயோ! இதென்ன? ஏதோ தரிசனம் என்று வந்தால் குழந்தையைப் பிடித்து வைத்துக் கொண்டார்களே என்று ஓலமிட்டது வந்தனாவின் அப்பா உள்ளம். அந்தச் சாதகரை நோக்கி ‘என் மகள் எங்கே’ என்றார் வந்தனாவின் அப்பா.

சாதகர் இவரிடம் வந்து, ‘உங்கள் குழந்தையை அன்னை இங்கேயே வைத்துக் கொள்ளச் சம்மதித்து விட்டார்’ என்று மகிழ்வுடன் கூறினார்.

ஆனால் இவள் தந்தையோ அதை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் சம்மதித்தால் போதுமா? என் குழந்தையை இங்கு விட்டுச் செல்ல நான் சம்மதிக்க வேண்டாமா? என்றார் கோபமாக.

அன்னை சொல்வது சரிதான். இந்தக் குழந்தைகளின் உள்ளங்களில் ஓர் ஆன்மீக நாட்டத்தை ஏற்படுத்துவது சிரமம் என்று நினைத்தேன். ஆனால் அது அவ்வளவு சிரமம் இல்லையென்பது தெரிகிறது. இவர்களுடைய பெற்றோர்களைச் சமாளிப்பதுதான் பெரிய பிரச்சனையாக இருக்கிறது என்று அன்னை சொல்வாராம். அன்னை வழங்கும் அர்த்தமுள்ள வாழ்க்கையை ஏற்றுக்கொண்டவர்கள் அன்னையைப் பொறுத்த-வரை சரியாகத்தான் நடந்து கொள்கிறார்கள்.

அவள், தான் வீட்டிற்குத் திரும்பிவரப் பிரியப்படவில்லை எனச் சொல்லியனுப்பிவிட்டாள்.

அவர் சாதாரண மானுடத் தந்தை. பாசப் பிணைப்பும், லோகாயதமான வாழ்வில் நம்பிக்கையும் கொண்ட அவரால் அதை ஏற்க முடியவில்லை. பெற்றவர் பேச்சை மறுக்கத் தெரியாத வந்தனாவா இப்படிச் சொல்கிறாள். அவரால் நம்ப முடியவில்லை. அவளைத் தான் பார்க்க வேண்டும் என்றார்.

அவள் வந்தாள்.

வந்தனா, உனக்கு என்னம்மா ஆயிற்று? என்று பரிவுடன் கேட்டார்.

‘அப்பா, இது மனப்பூர்வமாய் நான் தேர்வு செய்த வாழ்வு-தானப்பா. அன்னையே என் பூரண பாதுகாவலர். என்னை யாரும் எதுவும் செய்துவிடவில்லையப்பா. என் திருமணம் நின்று போனதை நீங்கள் சோதனையாகக் காண்கிறீர்கள். நான் அது என் வாழ்வின் நல்ல திருப்பு முனையாக எண்ணுகிறேன். சொல்லிப் புரியவைக்கக் கூடியதில்லையிது. உங்கள் மகளைச்



சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்து விட்டதாக நிறைவுடன் செல்லுங்கள்’ என்று இதமாகக் கூறிவிட்டு உள்ளே சென்று மறைந்துவிட்டாள்.

வேறு வழியின்றி அவர் திரும்பினார். இராணுவத்தில் சேரும் வீரர்களைக் கூட சில பெற்றோர் வழியனுப்பத் துணிவதில்லை. இராணுவத்தைப் போலவே வீரசாதனைதான் யோகமும். எத்தனைபேர் வாழ்வின் சிறு ஆசைகளுக்கு இடம் கொடாமல் பேரின்பத்தை நாடக்கூடும்? வாழ்வை வெறுத்தோடுவதில்லை பூரணயோகம். மகிழ்வுடன் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் புனிதச் செயல் இது. இதை ஏற்றுக்கொள்ள ஆத்ம ஞானம் வேண்டும். ஆசாபாசம் இதை அனுமதியாது.

ஆசிரமத்திலுள்ளோர் அவளை வியப்புடன் பார்த்தனர். ஆசார குடும்பத்திலிருந்து வந்த பெண். இளம் பெண் வேறு. இவள் எப்படி இங்கிருக்கப் போகிறாள் என்று பேசிக் கொண்டனர். சாரத்தை உள்ளம் புரிந்து கொண்டால் புறத்தில் வாழும் வாழ்விற்கு என்ன பொருள் இருக்கப் போகிறது!

இவளுடைய மெல்லிய சாயல் இவளை உறுதியற்றவள் என மற்றவர்களை நினைக்க வைத்தது. இவள் நீடிக்க மாட்டாள் என அனைவரும் பரிகசிப்பதும் உண்டு. இளம் வயது. தனியே, வெளியே வந்தறியாதவள். ஆயினும் இவள் அன்னைமீது கொண்ட அன்பு நாளுக்கு நாள் தீவிரமடைந்தது.

ஒரு மூத்த சாதகர், அன்னை தம்முடைய ஐரோப்பிய சீடரான பெண்ணைப்பற்றி, அவள் கார் டிரைவராகப் பணியாற்றுவது பற்றி உயர்வாகப் பேசியதைக் கூறிக் கொண்டிருந்ததை இவள் கேட்க நேர்ந்தது. அதுமட்டுமின்றி ஆண்கள் மட்டுமே செய்யும் பணிகளைப் பெண்கள் செய்வதுபற்றி ஸ்ரீ அன்னை பெருமைப்படுவதுபற்றியும் கேள்விப்பட்டாள். ஒரு பெண் தன் குழந்தையைப் பிரிந்து, சென்னை செல்ல அனுமதி கேட்டபோது ‘குழந்தையுடன் இரு’ என்று கூறிய அன்னை, அதே பெண் தான் விமானம் ஓட்டப் பயிற்சி பெற விரும்பிய போது அன்னை உற்சாகப்படுத்தியதும் அறிந்தாள்.

தானும் அன்னை விரும்பும் வண்ணம் ஏதேனும் செய்ய விரும்பினாள் வந்தனா. அன்னையைத் தரிசிக்கப் போகும் போதெல்லாம் அதை வெளியிட நினைப்பாள். ஆனால் ஒன்றும் பேசாது திரும்பிவிடுவாள்.

அப்போதுதான் பேண்ட் அணியும் கிறித்துவ அன்பர் ஒருவர் பஞ்சகச்சம் அணிந்து அன்னையைத் தரிசிக்க வர, அந்த ஆடை பெண்கள் அணியும் மடிசார் புடவை போல் காட்சியளிக்க 'யார் இந்தப் பெண்மணி' என்று வேடிக்கையாகக் கேட்டார் ஸ்ரீ அன்னை. அவர் கேட்ட பாவனையும், அவர் அழகிய சிரிப்பும் வந்தனாவைப் பெரிதும் கவர்ந்தது.

'தானும் ஏன் ஒருநாள் பேண்ட் அணிந்து அன்னை முன் செல்லக்கூடாது' என்று தோன்றியது.

அன்றைய இரவு தரிசனத்தின் போது அவள்தான் கடைசியாகச் சென்றவள். அன்று இவள் உள்ளே ஆசிர்வாதம் பெறச் சென்றதும் அன்னை குறும்பாகச் சிரித்தார். இவள் மலர்த்தட்டைச் சமர்ப்பித்து வணங்கி எழுந்தாள். டேபிளி-லிருந்து ஒரு அட்டைப்பெட்டி அழகாக ஒட்டி டேப் சுற்றப் பட்டிருந்ததை எடுத்து இவளிடம் கொடுத்தார். இரண்டு கைகளாலும் பெற்றுக் கொண்டாள். 'இதைப் பத்திரமாக வைத்துக் கொள். எப்போது பிரிக்கலாம் என்று சொல்லும் போது பிரித்துப் பார்க்கலாம்' என்றார். நாளை முதல் நீ கார் டிரைவிங் கற்றுக்கொள்ளப் போகிறாய். காலையில் தயாராய் இரு என்றார்.

அன்னையிடம் ஒன்றை பெற்றுக் கொண்ட மகிழ்ச்சி ஒருபுறம், டிரைவிங் கற்றுக் கொள்ளச் சொல்லி அவரே ஏற்பாடு செய்த மகிழ்ச்சி ஒரு புறம்.

சில நாட்கள் கடந்தன. காலை பதினோரு மணியளவில் ஆசிரம வாயிலில் ஒரு அழகிய கார் வந்து நின்றது. உயரமான மெல்லிய தோற்றம் கொண்ட ஓரன்பர் டிரைவருக்குரிய காக்கி பேண்ட் ஷர்ட்டுடன் 'கேப்' (cap) அணிந்து கம்பீரமாய் அதிலிருந்து இறங்கினார்.



அன்னை வெளியே செல்லும்போது தரிசிக்க அனுமதிக்கப் பெற்ற அன்பர் குழாம் அணிவகுத்து நிற்க மகாராணிபோல் கம்பீரமாய் வந்த அன்னை, காரின் அருகே செல்ல, டிரைவர் உடையில் நின்ற அன்பர் தலை கேப்பை கழற்றியவண்ணம் மரியாதையுடன் காரின் கதவைத் திறந்து பணிவாய் நிற்க அன்னை காரில் ஏறி அமர்ந்தார். கதவை மென்மையாகச் சார்த்திய வண்ணம் குனிந்து வணக்கம் செலுத்தியபின், முன்புற டிரைவர் 'சீட்டில்' அமர்ந்து காரை மெல்லச் செலுத்தத் தொடங்கினார்.

யாரிந்த புதிய டிரைவர் என்று சிலர் எண்ணினர். அன்னையின் வெளிப்புற வேலைகள் முடிந்து கார் ஆசிரமம் திரும்பியது. மீண்டும் சாதகர் குழாம் தரிசனத்திற்கு அணிவகுத்து நின்றது. இம்முறை அன்னையின் தரிசனத்துடன் புதிய டிரைவரைக் காணும் ஆவலும் சேர்ந்து கொண்டது.

கார் சீராக வந்து நின்றது. டிரைவர் சீட்டிலிருந்தவர் விரைவாக இறங்கி வந்து அன்னை இறங்குவதற்கு ஏதுவாகக் கார் கதவைத் திறந்துப் பணிவாக நின்றார். காரிலிருந்து இறங்கிய அன்னை காரை ஓட்டி வந்த அன்பரின் முதுகில் அன்புடன் மெல்லத் தட்டித் தம் பாராட்டை விழிகளால் தெரிவித்து விரைந்து உள்ளே சென்றார்.

அன்பர் காரை ஷெட்டில் வைத்துப் பூட்டிவிட்டு கம்பீரமாய் திரும்பி வந்தார்.

அன்பர்கள் சூழ்ந்து கொண்டனர். 'வந்தனா நீயா? இந்தவுடையில் நீ எவ்வளவு கம்பீரமாக இருக்கிறாய் தெரியுமா? ஆரம்பத்தில் உன் மெல்லிய தன்மை கண்டு நீ இங்கு நிலைத்திருக்க மாட்டாய் எனக் கேலி செய்தோம். நீ எப்படி இவ்வாறு மாறினாய்?' என்று வியப்புடன் கேட்டனர்.

உண்மையில் நான் உங்களுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். நான் உறுதியுடன் அன்னையிடம் நிலைக்க மாட்டேன் என நீங்கள் கேலி செய்ததால், நான் அன்னையுடன் உறுதியாய் இருக்க வேண்டும் எனப் பிரார்த்தித்தேன். ஒரு முறை பேண்ட் அணியும் அன்பர் ஒருவர் பஞ்சகச்சம் அணிந்து

அன்னையிடம் ஆசி பெற வந்தார். அப்போது அன்னை புடவை போன்ற அந்த ஆடையின் தோற்றத்தைக் கண்டு, யாரிந்தப் பெண்மணி, என வேடிக்கை செய்ததைப் பார்த்தேன். நானும் ஒரு முறை பேண்ட் அணிந்து சென்றால் யாரிந்த இளைஞர் என்று கேட்பார் என்று எண்ணி நின்றேன். அந்தக் கற்பனையில் என் வெட்கவுணர்வு வெளிப்பட்டது. அப்போது அன்னையிடம் மானசீகமாய் எனக்குக் கம்பீரமான தோற்றமும், மனவுறுதியும் வேண்டுமென பிரார்த்தித்தேன். அப்போது அன்னை என் தோள்மீது தம் கைகளை வைத்து என் விழிகளை உற்று நோக்கினார். அவர் எனக்குள் உறுதியையும், கம்பீரத்தையும் விதைத்தார் என்பது இப்போது புரிகிறது.

அன்று அவர் என்னிடம் ஒரு அட்டைப்பெட்டியை அளித்து அதைத் தாம் கூறும்போது பிரித்துப் பார்க்கலாம் என்றார். நேற்றுவரை அவர் ஏற்பாட்டின்படி காரோட்டும் பயிற்சிக்குத்தான் வெளியே சென்றிருந்தேன். இன்று காலைதான் அந்தப் பெட்டியைப் பிரித்துப் பயன்படுத்தலாம் என்றார். அதில் இருந்தது இந்த டிரைவர் அணியும் காக்கி உடைதான் என்று தன் உடையைக் கம்பீரமாய்த் தொட்டுக் காட்டினாள்.

எத்தனை பேருக்கு வாய்க்கும் இந்த வாய்ப்பு? வந்தனா பெரியப்பாவை நன்றியுடன் நினைத்தாள்.

முற்றும்

★★★★

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சிந்தனை மனதின் ஆசை.

பிறருக்குச் சொல்லப் பிரியப்படுவது மனத்தின் செயல்.

செயலழியாமல் சிந்தனை மௌனமாகாது.

சிந்தனையற்ற மௌனத்தின் அஸ்திவாரம் உபதேசமழிவது.

கரையும் செயல் அழியும் சொல்.



## தெரியாது

கர்மயோகி

- வலியப் போய் உதவினால் உபத்திரவம் வரும் எனத் தெரியாது.
- அளவுகடந்த பிரியமுள்ள இடத்திலும் காரியம் அந்தஸ்திற்கேற்பவே நடக்கும் எனத் தெரியாது.
- உடையவரானாலும், உரிமையை வற்புறுத்தாவிட்டால், முழு உரிமையையும் தயங்காமல் எடுத்துப் போவார்கள் எனத் தெரியாது.
- அறியாதவன் ஞானியிடம் பயில வந்தாலும், ஞானி அவனிடமிருந்து அறிவு பெறுவதுபோல் நினைப்பான் எனத் தெரியாது.
- உயர்ந்த நன்றியையும் உணர்ந்து உன்னதமாக உயர் நிலையிலுள்ளவர்க்குச் செலுத்தினாலும், அவர்கள் உள்ளம் தாழ்ந்ததானால், அவரால் நமக்கு ஏற்கனவே கெடுதல் நிகழ்ந்திருந்தால், பலன் பெருந்தன்மைக்கு வாராது, பலன் முழு அழிவாக இருக்கும் எனத் தெரியாது.
- பிரம்மாண்ட பலனையும், பிறர் சொல்வதால் மறுப்பார் எனத் தெரியாது.
- கேட்காமல் கொடுத்தால் பயன்படாது எனத் தெரியாது.
- ஒருவரை அநியாயமாக அழித்தவன், அழித்ததால் பலன் பெறாவிட்டால் அழிந்தவனைக் குறை கூறுவான் எனத் தெரியாது.
- நமக்குக் கெடுதல் செய்தவன் அக்கெடுதலுக்காக நன்றி எதிர்பார்ப்பான் எனத் தெரியாது.
- யாரையும் ஏமாற்ற இடம் தரவில்லையென குறைபடுவார் எனத் தெரியாது.

- நம்மை அழிக்க நம் உதவியை நாடுவார் எனத் தெரியாது.
- தரித்திரமானவர்க்கு அதிர்ஷ்டம் தேடிக் கொடுத்தால், அவர்கள் கெட்டுப் போக நாம் நினைப்பதாகக் கூறுவார் எனத் தெரியாது.
- அழித்தவனை ஆபத்திலிருந்து காப்பாற்றினால் நீதான் என்னை அழித்தாய் எனக் கூறுவான் எனத் தெரியாது.
- எந்த மனிதனும், எதையும் கூறுவான் எனத் தெரியாது. கர்மத்திலிருந்தும் எவரையும் காப்பாற்றலாம் என்றாலும், 'உத்தரவு' இல்லாமல் செய்யக் கூடாது எனத் தெரியாது.
- படிப்பு, திருமணம், சொத்து, பதவியெல்லாம் சுயநலமிக்குப் பெற்றுக் கொடுத்தாலும், அவனுக்கு நன்றியிருக்காது, பெற்றது நினைவிருக்காது எனத் தெரியாது.
- எவ்வளவு நல்லவரானாலும், சிறு விஷயத்திற்குக் கட்டுப்பட்டவரானால், அவர்களால் நல்லதை அனுமதிக்க முடியாது எனத் தெரியாது.
- ஒருவர் மனம் அடுத்தவர் நல்ல குணத்தை ஏற்காது எனத் தெரியாது.
- ஒரு துறையில் உச்சகட்ட அனுபவம் பெற்றவரும், அடுத்த துறையைப்பற்றி அர்த்தமற்றார்ப்போல் பேசுவார் எனத் தெரியாது.
- குரங்கு ஆப்பைப் பிடுங்கியதைப்போல் அறிவும், அனுபவமும் உள்ள மனிதன் செயல்படுவான் எனத் தெரியாது.
- ஆயுள் முழுவதும் இலட்சியப் போராட்டம் நடத்தியவர், தனக்கே பதவி வந்த முதல் நேரம், எதிராக நடப்பார் எனத் தெரியாது.

★★★



## சாதனைக்கு உதவும் விஷயங்கள்

என். அசோகன்

வாழ்க்கையில் எல்லோருமே சாதிக்க விரும்புகின்றனர். ஆண்களாக இருந்தால் வருமான உயர்வு, பதவி உயர்வு, அந்தஸ்து உயர்வு என்று பல்வேறு வழிகளில் அந்தச் சாதனையை அனுபவிக்க விரும்புகின்றனர். ஒரு காலகட்டம் வரையிலும் பெண்களுடைய சாதனை என்பது நல்ல வரனைத் திருமணம் செய்து கொள்வது, வீடு கட்டிக் கொள்வது, பிள்ளைகளுக்கு நல்ல கல்வி வழங்குவது என்று இருந்தது. ஆனால் இப்போது பெண்களே கெரியரில் பெரியதாகச் சாதிக்க விரும்புகின்றனர். பேங்க் ஆபீசர், ஐ. ஏ. ஸ். ஆபீசர், கார்ப்பரேட் ஆபீசர் என்று எல்லாத் துறைகளிலும் பெண்களைப் பார்ப்பது இப்போது சகஜமாகி விட்டது. ஆகவே ஆணுக்குப் பெண், சரி நிகர் சமானம் என்று பேச்சளவில் இருந்தது, இன்று நடைமுறைக்கு வந்து விட்டது.

சாதிப்பவர்கள், சாதிக்க முடியாதவர்கள் என்று எடுத்துக் கொண்டால், முன்னவர்கள் குறைவாகவும், பின்னவர்கள் அதிகமாகவும்தான் இருப்பார்கள். சாதிக்கின்றவர்களைப் பார்க்கும் பொழுது, சாதிக்க முடியாதவர்களுக்கு அது ஒரு புரியாத புதிராகவும், விந்தையாகவும் இருந்தது. ஆனால் சாதிக்கிறவர்கள் எப்படிச் சாதிக்கிறார்கள் என்று நாம் ஆழ்ந்து கவனித்தோம் என்றால், அது ஒரு பெரிய புதிராக இருக்காது. எல்லோருக்கும் எளிதில் விளங்கக் கூடியதாக இருக்கும். ஸ்ரீ கர்மயோகி அவர்கள் சிறப்பான சாதனைக்குத் தேவையானவை மூன்று என்று கூறுகிறார். அந்த மூன்றும் பின்வருமாறு:

1. எடுக்கின்ற முடிவு விவரம் தெரிந்த முடிவாக இருக்க வேண்டும்.
2. செய்கின்ற வேலையில் முழு உற்சாகம் இருக்க வேண்டும்.

3. அறிவிற்குத் தெரிந்ததைச் செயலில் கொண்டுவரும் செயலாற்றல் வேண்டும். இதை ஆங்கிலத்தில் capacity for practical execution என்று சொல்வார்கள்.

பெரிய அளவில் சாதிப்பவர்களைக் கவனித்தால் மேற்கூறிய மூன்று விஷயங்களும் அவர்களிடம் சிறப்பாகவே இருக்கும். இவர்கள் ஒரு வேலையில் இறங்கினார்கள் என்றால், அந்த வேலையைத் தொடங்குவதற்கு முன்னால் அதுபற்றி எல்லா விவரங்களையும் சேகரம் செய்து கொண்டு அது தனக்கு உகந்த வேலைதான் என்று முடிவு செய்து கொண்டுதான் இறங்கி இருப்பார்கள். உதாரணமாக ஒரு டிப்பார்ட்மெண்ட் ஸ்டோர் ஆரம்பிக்க சாதனையாளர் விரும்புகிறார் என்றால், அதுபற்றிய எல்லா விவரங்களையும் அவர் சேகரித்து வைத்திருப்பார். அதாவது எங்கே, என்ன அளவு கடை ஆரம்பிக்க வேண்டும், எதையெல்லாம் ஸ்டாக் செய்ய வேண்டும், எதற்கு டிமாண்ட் இருக்கிறது, எதற்கு டிமாண்ட் இல்லை, என்ன முதலீடு தேவைப்படுகிறது, அதற்குக் கடன் வாங்க வேண்டுமா, கடையில் யாரைப் பணியில் அமர்த்த வேண்டும், என்ன சம்பளம் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் தீர விசாரித்து விட்டுத்தான் இந்த வேலையிலேயே இறங்குவார். அதாவது, அவர் தொழில் சம்பந்தப்பட்ட எந்த ஒரு முக்கியமான விவரமும் அவருக்குத் தெரியாமல் போய்விட்டது என்ற நிலையிலேயே அவர் இருக்கமாட்டார். கடை என்று ஆரம்பித்து அது வெற்றி-கரமாக நிலைபெறும்வரை நேரம், காலம் என்று பார்க்காமல் உழைக்கத் தயாராக இருப்பார். மூன்றாவதாக, குறிப்பிட்ட செயலாற்றல் என்பதும் அவரிடம் நிறையவே இருக்கும். அதாவது டிப்பார்ட்மெண்ட் ஸ்டோர் என்று வைத்தால், அதில் பத்து பேரை வைத்து வேலை வாங்க வேண்டும். அதற்கான லீடர்ஷிப் அவரிடம் இருக்கும். எந்த ஒரு ஸ்தாபனமும் வெற்றி-கரமாகச் செயல்பட வேண்டும் என்றால் அந்த ஸ்தாபனத்தை நடத்துபவருக்கு முதலீடு, பொருட்கள், லேபர், மற்றும் மார்க்கெட், டெக்னாலஜி என்றிவ்வைந்தையும் வெற்றிகரமாக ஒருங்கிணைத்துச் செயல்படுத்தத் தெரிய வேண்டும். கஸ்டமர்



வந்து ஒரு பொருள் வேண்டும் என்றால், அது அந்த நேரம் தன்னிடம் இல்லை என்று அவர் சொல்லும்படி தன்னை வைத்துக் கொள்ளக் கூடாது. டிப்பார்ட்மெண்ட் ஸ்டோரை நிர்வகிக்க ஒரு திறமைசாலியான மேனேஜர் இல்லை என்றால் அவருக்கு லேபர் மேனேஜ்மெண்ட் வீக் என்றாகிறது. அதாவது, அவர் கொடுக்க விரும்பும் சம்பளத்திற்கு இசைந்து வேலை செய்யத் திறமைசாலியான மேனேஜர் முன்வரும் அளவிற்கு அவருக்கு லீடர்ஷிப் இருக்க வேண்டும்.

இதற்கு மாறாக, அவசரமாக, சரியாக விசாரிக்காமல் ஏதோ ஆர்வத்தில் உந்தப்பட்டு வேலையை ஆரம்பிப்பவர்கள் பல பேர் உண்டு. இவர்களுக்கு வேலை கெட்டுப் போகிறது என்றால் அதில் எந்த ஆச்சரியமும் இல்லை. உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட நிதி நிறுவனம் 36% வட்டி தருகிறோம், அதனால் எங்களிடம் டெப்பாசிட் செய்யுங்கள் என்று கவர்ச்சியாக டி.வி.யில் விளம்பரம் தருவார்கள். இம்மாதிரி விளம்பரத்தைப் பார்த்தவுடன் அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு வேறு எந்த சிந்தனையும் இல்லாமல், உடனே அந்த நிறுவனத்தில் டெபாசிட் செய்வார்கள். ஒரு சில மாதங்களுக்கு வட்டி வரும். பின் வட்டி வராமல் நிற்கும்போது, என்னாயிற்று? ஏதாயிற்று? என் பணம் போய் விட்டது என்று புலம்புவார்கள். அவர்கள் செய்கின்ற தவறு, கேள்விப்பட்ட விஷயத்தை மறுபரிசீலனை செய்வதில்லை என்பதாகும். 36% வட்டி இவர்களால் எப்படிக் கொடுக்க முடியும்? வெளியில் இவர்கள் 60% வட்டிக்குக் கடன் கொடுத்தால்தானே இவர்கள் 36% வட்டி கொடுக்க முடியும். இப்படி 60% வட்டிக்கு யார் இவர்களிடம் கடன் வாங்குவார்கள். அப்படி யாரும் கடன் வாங்குவதாகத் தெரியவில்லை என்றால், இவர்கள் சொன்ன வட்டியைக் கொடுக்க முடியாது என்று தெளிவாகிறது. அப்படி என்றால் இந்த விளம்பரமே போலி என்றிவர்கள் ஒதுங்கியிருக்க வேண்டும். அதிக வட்டியைப்பற்றி கேள்விப்பட்டவுடனேயே பேராசை கண்ணை மறைப்பதால் வேறு எதைப்பற்றியும் சிந்திக்காமல் பணத்தைக் கொடுத்து விட்டுப் பிரச்சனைக்கு ஆளாகிறார்கள். இம்மாதிரியே சரியாகச் சிந்திக்காமல், விஷயத்தை நான்கு கோணத்திலிருந்து

ஆராயாமல் வேலையை ஆரம்பித்துச் சிக்கலில் மாட்டிக் கொள்பவர்கள் பல பேர்.

பள்ளமான இடத்திலுள்ள பிளாட் விலை மலிவாகக் கிடைக்கிறது என்று ஆசைப்பட்டு வாங்கி வீட்டைக் கட்டிக் கொள்வார்கள். பின் மழைக் காலத்தில் பள்ளத்தை நோக்கி வெள்ளம் வருவதால் அங்கே இருக்க முடியாமல் அவஸ்தைப் படுவார்கள். பெரிய சம்பந்தம் தேடி வரும்போது பெருமையாக இருக்கிறது என்று ஒத்துக் கொள்வார்கள். பின்னர் ஒத்துக் கொண்டபடி சீர் செய்ய முடியாமல் கல்யாண செலவிற்கு பணம் புரட்ட முடியாமல், அவமானத்திற்கு ஆளாவார்கள். பெரிய இடத்துச் சம்பந்தத்தைச் சந்திப்பவர்கள் விரலுக்குத் தகுந்த வீக்கம் என்ற அணுகு முறையைக் கையாண்டாலே இவர்களுக்கு எந்தச் சிரமும் வராது. இப்படியாக பெருமை, வறட்டு கௌரவம், சீக்கிரம் சமூகத்தில் முன்னேற வேண்டும் என்ற அளவு கடந்த ஆர்வம் என்றிவை எல்லாம் ஒன்று சேர்ந்து நிதானத்தை இழக்கச் செய்கிறது.

காரிய பூர்த்திக்குச் சிறந்த தகுதி உள்ளவர்கள் உள் விஷயங்களிலும் சரி, வெளி விஷயங்களிலும் சரி இரண்டுமே நிரம்பி இருப்பவர்கள்தாம். ஒரு வேலையைச் சிறப்பாகச் செய்வதற்குப் பணம், டெக்னாலஜி, லேபர், மார்க்கெட் என்றிந்த வெளி விஷயங்கள் மட்டும் இருந்தால் போதாது. உள் விஷயங்களான உழைப்பு, முன்னேறும் ஆர்வம், சவால்களை எதிர்கொள்ளும் தைரியம், விடாமுயற்சி, நாலு பேரை நிர்வகிக்கும் லீடர்ஷிப் என்றிவை எல்லாம் உள்ளேயும் இருக்க வேண்டும்.

தொடரும்...

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

## பேதையும் பதரே

'தன் ஆயுதமும் தன் கைப்பொருளும் பிறன் கையில் கொடுத்த பேதையும் பதரே' என்ற தமிழ்ச் சொல் பொன்னானது. நடைமுறையில் இதுவே வேத வாக்கு. இதற்கு மாற்றான அனுபவம் வாழ்விலில்லை. நண்பனிடம் கொடுத்த முதல், மனைவியிடம் கொடுத்த பெட்டிச் சாவி, கணவனிடம் கொடுத்த மனைவியின் சொத்து பெற்றவருக்கே பயன்படும். சமர்ப்பணம் இந்த பழம் பெரும் உண்மையைக் கடந்தது. பேதையையும், பதரையும் மனிதனாக்குவது சமர்ப்பணம்.

ஸ்தாபனத் தலைமைக்குக் கொடுத்த முழு அதிகாரம், கூட்டாளியிடம் வாய்மொழியாகச் செய்த ஒப்பந்தம், ஏமாற்றுபவரிடம் கொடுத்த பெருமுதல் போன்ற நிகழ்ச்சிகளில் தமிழ் நாட்டுப் பழம் பெரும் அனுபவம் உண்மை என்பதை ஒவ்வொரு முறையும் நிரூபிக்கிறது. நிகழ்ச்சிகள் சமர்ப்பணம் வந்தால் நிலைமை மாறும் என்பது உண்மை.

> ஸ்தாபனத் தலைவர் முழு அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவேன் என்று கூறியவர், சமர்ப்பணத்தால் நிலைமை மாறியதால், தன் தலைமைப் பதவியை இராஜினாமா செய்தார்.

சமர்ப்பணம் பெரியது. பேதையையும், பதரையும் மனிதனாக்கும். ஏமாற்ற முயன்ற கூட்டாளியும், மனம் பெற்ற நம்பிக்கைக்குப் பாத்திரமில்லாதவரும் தங்களை மீறி, தங்கள் சுபாவத்தை மீறி, சமர்ப்பணத்திற்கு உட்பட்டது அன்பர் வரலாறு.

## தீட்சை

மரபில் தீட்சை என்பது குரு சிஷ்யனைத் தன் ஆன்மீக உயிரின் பாகமாக ஏற்பது. பொதுவாக இது மந்திர தீட்சையாக அமையும். பூரணயோகம் பிரபஞ்சம் பிரம்மத்தில் பூரணமாவதைப் பூலோகம் அறிவது. பிரம்மத்தின் முழுமை, பிரபஞ்சத்தில் முழுமை பெறுவதைப் பூலோகம் ஆத்மாவில் உணர்வதாகும். தரிசனத்தில் அன்னைமுன் (அல்லது பகவான்முன் அல்லது அவர்கள்முன்) வந்தவுடன் ஆத்மா விழித்து, மனத்தில் பரவி, உயிருக்கு ஜீவனளித்து, உடலின் ஆழத்தை எட்டுகிறது. முழு ஜீவன் க்ஷணம் விழித்து பிரம்ம தரிசனத்தைப் பகவானாக, அன்னையாகக் காணமுடிகிறது. இதை உணர்பவர் மீண்டும் வீட்டிற்குப் போக முடியாது. போய் விட்டுத் திரும்பும் நிலை இது இல்லை. பகவானைக் கண்டபின் அப்படியே இங்கேயே தங்கியவர் ராஜாங்கம் என்ற டாக்டர். தம் மனைவியுடன் தங்கி விட்டார். மற்றவர் வீடு போய் குடும்பத்துடன் வந்தவர். இந்தத் தீட்சை ஆத்மாவின் மௌனமாகவும், மனத்தில் ஜோதியாக-வும், உயிரில் ஜீவனுள்ள இலட்சியமாகவும், உடல் வாழ்வில் பொருளாகவும் ஏதோ ஒரு ரூபத்தில் எழும். கண்டவர் பலர், காணாதவரும் பலர். கண்டாலும் காணாவிட்டாலும், அருளினின்று தப்பித்தவரெவரு-மிலர்.